உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

| தொகுதி உச] | அக்ஷயஹூ ஆனிமீ | [பகுதி அ. |
| --- | --- | --- |
| Vol. XXIV. | June-July-1926. | No. 8. |


## அசோகன்.

கும்பகோணம் கவர்ன்மென்ட் காலேஜ் சரித்திர ஆசிரியர் மகா-ஏ-ஏ ஸ்ரீ R. ராமையர் M.A., L T., அவர்கள், கி. மு. மூன்றும்நூற்றுண்டில் வடஇந்தியாவில் பிரசித்தியுடன் அரசாண்ட அசோகன் என்னும் அரச னுடைய மூலசாசனங்களையும் அவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பையும், 'அசோகசாசனங்கள்' என்றபெயருடன் நன்ருக அச்சிட்டுவெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அதில், சாசனங்களின்விஷயத்தை அறிந்துகொள்வ தற்கு அநுகுணமாக 'இந்தியாவின் பூர்வசரித்திர ஆராய்ச்சி, அசோகன் சரிதை, அசோகன் தர்மம், அசோகன் அரசாட்சி, அக்காலத்துப்பழம் பொருள்கள், அசோகன் எழுத்து, கல்வெட்டுகள்' என்றவிஷயங்களையும் பூர்வாங்கமாகச் சேர்த்திருக்கிறார்கள்.

மூலசாசநங்களைச் சிலர் இதற்குமுன் அச்சிட்டிருந்தபோதிலும் அவை அதிக விலையுள்ளவை. இப்பதிப்பு, சுலபமானவிலைக்குக் கிடைத்தபோதிலும், நல்லகடிதத்திற் பெரிய அட்சரத்தில் (தேவநாகரம்) பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அநேகபாடங்களுள்ளவிடங்களில், பொருத்தமானபாடம் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதன் தமிழ்மொழிபெயர்ப்பும் நல்ல பெரியஎழுத்திற் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆங்கிலமொழிபெயர்ப்பைவிட இவர்கள் தமிழ் மொழிபெயர்ப்பு மூலத்தை யடியொற்றிச்சென்று அதைச் செம்மையாய் விளக்குகிறது. தமிழர்களுக்கு இத்தமிழ்மொழிபெயர்ப்பு, சாசனக்

கருத்தையறிவதற்குக் கருவியாயிருப்பதோடுகூடப் பாலிபாஷையின் போக்கைச் சுலபமாய்க்கற்றறிவதற்கு முபயோகமாகிறது. தமிழுரையாசிரியர்கள், சில வடமொழித்தத்பவங்களைப் பாகதமென்றுகாட்டியிருப்பவையெல்லாம், இச்சாசனபாஷையாகிய பாலிபோன்ற பிராகிருத பாஷைச்சொற்களேயாகையால் தமிழர்களுக்கு இந்தஞானம் அவசியமானது.

விஷயங்களை மனதிற் சுலபமாய்ப்பதியவைப்பதற்குச் சில சித்திர பத்திரங்களையும் சேர்த்திருக்கிறார்கள்.

இவைகளெல்லாம், பாலிபாஷையிலும் பௌத்தநூல்களிலும் சரித்திர ஆராய்ச்சியிலும், ஐயரவர்களுக்குள்ள பேரறிவைப் புலப்படுத்துகின்றன. இந்நூலை வெளிப்படுத்திய ஐயரவர்களுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. இதைப்போன்ற இன்னும் அநேக இந்தியசரித்திர நூல்களை ஐயரவர்கள் தமிழர்களுக்கு உபகரிப்பாராக.

இந்நூலிலுள்ளவற்றின் சாராம்சங்களிற் சிலவற்றை இங்கே சுருக்கியெழுதுகிறேன்:—

மகததேசத்திற் பாடலிபுரத்திற் 'பல்புகழ்நிறைந்த வெல்போர் நந்தர்' (அகம்—325) ஆண்டபின், அர்த்தசாஸ்திரகருத்தாவாகிய (விஷ்ணுகுப்தனென்றும் கௌடில்யனென்றும் மறுபெயர்களுள்ள) சாணக்கியனென்னும் சோழியப்பிராமணனுடைய உதவியால் மௌரிய சந்திரகுப்தன் அரசனானான். இவன் மைசூர்ச் சந்திரகிரிமலையில் அநசநவிருதத்தால் உயிர்துறந்தானென்பது ஜைநர்களின் ஐதிஹ்யம். இவன் மகன் பிந்துசாரன். இவன்மகன் அசோகன். 'திவ்யாவதானம்' 'ராஜதரங்கிணி' முதலிய ஸமஸ்கிருதநூல்களிலும் 'தீபவம்சம்' 'மகாவம்சம்' முதலிய பாலிப்பாகதநூல்களிலும், இவன்வரலாறு கூறப்பட்டிருக்கிறது. முதலில் 'தக்ஷசிலை'யிலும் அப்புறம் உஜ்ஜயினியிலும் அசோகன் ராஜப்பிரதிநிதியாயிருந்தான். தகப்பனாகிய பிந்துசாரனிறந்தவுடன் அசோகன் பாடலிபுரத்தையடைந்து 'உபராஜன்' என்றபட்டத்துடன் நான்குவருஷமாண்டு பின்பு பட்டாபிஷேகஞ்செய்துகொண்டான். அவனுக்குச் சகோதரசகோதரிகளிருந்தார்கள். வடநாட்டு ஐதிகங்களில் இவன் முதன்மனைவி அஸந்தமித்திரையென்றும் இரண்டாவதுமனைவி

திஷ்யரக்ஷிதையென்றும் இவள் தீயளென்றும் விருத்தாந்தங்கள் காணப்படுகின்றன.

அசோகன் குணாதிசயங்கள்:— பௌத்தமத நூல்கள் இவன் ஆரம்பத்தில் துஷ்டனாயிருந்தானென்றுகூறுவது வாஸ்தவமல்ல. ஆரம்பத்தில் மாம்ஸம் புசித்துக்கொண்டிருந்த இவன், பின்பு மாம்ஸாஹாரத்தை விட்டுவிட்டான். போரில் கொலையும் கொடுந்துன்பமும் செய்யவேண்டியிருக்கிறதென்று நினைத்துப் போரைநிறுத்திவிட்டான். அந்யதேசங்களை ஜயிப்பதில் ஆசையற்றவன். தனது பிரஜைகளைத் தன்சொந்தக்குழந்தைகளைப்போலவே பாவித்து அவர்கள் க்ஷேமத்திலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தான். 'மதத்திலும் ஒழுக்கமே சிறந்தது'என்ற கொள்கையையுடையவன். தான் பௌத்தமதத்தலைவனாயிருந்தும் பிராமணர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று அடிக்கடி சொல்வதிலிருந்தும், எல்லாரும் மதக்ஷமையுடையவர்களாயிருக்க வேண்டுமென்று உபதேசிப்பதிலிருந்தும் இவன் எவ்வளவு விசாலமான உதாரநோக்கமுடையவனாயிருந்திருக்கவேண்டுமென்பது விளங்கும். ஜீவராசிகள் துன்பமுறுவதையும் மனிதர் ஒழுக்கக்குறைவாய் நடப்பதையும் சிறிதும் சகியாதவன். இவ்வுலகத்தில் இவ்விரண்டையும் அறவே ஒழிப்பதற்குத் தன்னாலியன்றவரை பாடுபட்டான். அதற்காகச் சிலாசாசனங்கள் செய்வித்தான். வழிப்போக்கர்களுக்காக மாமர ஆலமரச்சாலைகள் கிணறு சாவடி தண்ணீர்ப்பந்தல் முதலியவைகளை உண்டுபண்ணினான். நோய்கொண்டமனிதர்களுக்காகவும்மிருகங்களுக்காகவும் வைத்தியசாலைகளேற்படுத்தினான். அன்னியநாட்டரசர்களையும் அப்படிச்செய்யும்படி வேண்டிக்கொண்டதிலிருந்து உலகத்து மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் நினைத்தானென்பது தெரிகிறது. கருணையேவடிவெடுத்தாற்போன்றவன். வேட்டையாடுதலைத் தவிர்த்தவன். புண்ணியஸ்தல சாதுஜநங்களின் தர்சனத்தில்விருப்பங்கொண்டவன். ஜநங்கட்கு மதநெறி நீதிநெறி போதிக்கக்கூடிய உறுதியானகட்டிடங்களைக்கட்டுவதிற் பேராவாவுடையவன். குளமுதலிய பாசனவசதிகளையேற்படுத்தினான். மதச்சீர்திருத்தஞ்செய்தான்.

அரசாட்சி:— தக்ஷசிலா ப்ரதேசம், உஜ்ஜயினியை ராஜதானியாகவுடைய மாளவராஜ்யம், தொஸாலியை ராஜதானியாகவுடைய கலிங்கம், சுவர்ணகிரியைராஜதானியாகவுடைய தட்சணம் முதலியவை இவன் நாட்டில் முக்கியமானபிரிவுகள். தமிழ்நாடுகள் அவனுக்குக் கீழ்ப்

பட்டிருக்கவில்லை. வடமேற்கில் கிரேக்க அரசர்கள் ஆண்டார்கள். ஆப்கனிஸ்தானம், பலுச்சிஸ்தானம், காஷ்மீரம், நேப்பாளம் முதலிய தேசங்களும் அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தன. அவன்மகன் குணாலன் மத்திய ஆசியாவிலுள்ள கோட்டான்பிரதேசத்தையாண்டான். பதினான்கு விதமான உத்தியோகக்கூட்டத்தார்கள் ராஜாங்கம் நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள்:—ரஜூகர், மகாமாத்திரர், வ்ருசபூமிகர், வியோஹாலகர், யுக்தர், ப்ராதேசிகர், பதிவேதகர் என்பார். இவர்களில் முக்கியமானவர் தர்மமகாமாத்திரர். இவர்கள் ஜனங்களுக்குள் தர்மமும் ஒழுக்கமும் குன்றாதபடி பாதுகாத்தும் பிரசாரமூலமாய் அதை அபிவிருத்திசெய்தும் வந்தார்கள். ஏழைஜநங்களுக் குபகாரஞ்செய்வதும் அநாதைகளுக்கு அன்னவஸ்திர முதலிய தானதர்மங்கள்செய்வதும் இவர்கள் வேலைதான். ராஜாங்கத்து முக்கியமானகார்யங்கள் ஜனங்களை மேவியே செய்யப்பட்டன. அசோன் தான் பட்டத்துக்குவந்த 9-வது வருஷத்தில் கலிங்கதேசத்தின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினான். அதில் அநேகர் மடிந்தது கண்டு இரங்கி இனி யுத்தஞ்செய்வதில்லையென்று தீர்மானித்தான். அதனாலேயே அவன் அநேகநாடுகளைத் தன்குடைக்கீழ்க்கொண்டுவர விரும்பவில்லை.

நேபாளத்துக்கும் காஷ்மீரத்துக்கும் தலைநகரங்களாக முறையே லளிதா பட்டணத்தையும் ஸ்ரீநகரையும் உண்டாக்கினான். ஜனங்களுக்கு உத்ஸாகமுண்டாகுமாறு அடிக்கடி உத்ஸவங்களை நடத்தினான். தன்கீழ்உத்தியோகஸ்தர்கள் ஜனங்களை ஹிம்ஸியாதபடி ஐந்துவருடத்திற்கொருதரம், அவர்களிடமிருந்து அநுஸம்யாநம் என்னும் பிரமாண வாக்குமூலம்வாங்கிக்கொண்டு அவர்களைத் திரும்பநியமிப்பது வழக்கம். 'காட்சிக்கெளியன்கடுஞ்சொல்லனல்லனேல், மீக்கூறு மன்னனிலம்' என்றபடி, தன்னை, எப்படிப்பட்டசமயத்திலேனும் எப்படிப்பட்ட இடத்திலேனும் முறையிடுவோர் தட்டுத்தடையில்லாமல் நேரில்வந்து பார்த்து முறையிட்டுக்கொள்ளலாமென்று விளம்பரம்செய்ததுமன்றி அப்படிச் சிலாசாசனமுஞ் செய்வித்தான். ஜனங்கள் தன்விஷயமாய்ச் செய்த குற்றங்களைப் பொறுத்துவந்தான். ஜனங்கள் அடக்கம் அமைதி சமாதானம் சந்தோஷம் இவைகளுடன் எப்போதும் சுகமாய் வாழவேண்டுமென்று விரும்பினான். 'மேல்கரைநாட்டில் சுதர்சனஏரி'

போன்ற அநேகவரிகளை வியவசாயகாரியத்திற்காகத் தோண்டினுன். அநேகசாசனங்கள்மூலமாகத் தேசத்தில் நன்னடத்தையைநிலைநிறுத்தினுன். எம்மதமும் சம்மதமென்ற கொள்கையுடையவன். தூண்களையும், குகைகள், ஸ்தூபி, சைத்தியம் முதலிய சிற்பவேலைகள் நிறைந்த கட்டடங்களையும் நிர்மாணஞ்செய்தான். வழிப்போக்கர்களுக்கு வழிகளும், வழிகளிற் சாலைகளும், கிணறுகளும், தண்ணீர்ப்பந்தலும், கனிதருமரங்களும், மருந்துச்செடிகளும் உண்டாக்கினுன். மிருகங்களுக்கு வைத்தியசாலை ஏற்படுத்தினுன். ராஜ்யத்தில் அஹிம்ஸையில்லாமற் சுகம்வளரப் பாடுபட்டான். அக்கிரமமென்பது அவன் ராஜாங்கத்திற் கிடையாது. இப்படி ஜனங்களுக்குப் பிரியத்தையே நாடிச்செய்து வந்தமையால் பிரியதர்சி யென்னும் பெயரை வஹித்தான். மனிதருக்குச்செய்யும்பிரியத்துக்குத் தேவரு மூகப்பாதலால் தேவானும் பிரிய என்ற தகுதியான விருதையும் கைக்கொண்டான்.

இவன் கி. மு. 232-ல் இறந்தான். இவனுக்குப்பின் அறுவர் ஆண்டனர். பின் சுங்கவமிசத்தார் ஆளத்தொடங்கினர்.

## அசோகனதுகட்டடங்கள்.

I. பாடலிபுரத்திலிருந்த இவனுடைய அரமனையின் அஸ்திபாரங்களும் தூண்களும் சமீபத்திற் றோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் அமைப்பு, பாரசீக பூர்வீக அரசர்களின் அரமனைமண்டபங்களை ஒத்திருக்கின்றதென்று சாஸன இலாகாத்தலைவர் அபிப்பிராயப்படுகிறுர்.

II. ஸ்தூபி:—புத்தர் அல்லது அவருக்குப்பின்வந்த பெரியோர்களின் எலும்பு சாம்பல்களைப் பொதிந்து சேமித்துவைத்த இடங்களின்மேல், கல் அல்லது செங்கல்லாற் கட்டப்பட்ட கட்டடத்துக்கு ஸ்தூபி என்று பெயர். அது வடிவத்தில், ஒருகோளத்தின்பாதியை உயர்ந்த பீடத்தின்மேற் கவிழ்த்துவைத்ததுபோலிருக்கும். உச்சியில் T போன்ற அடையாளமும் விரித்தகுடையின்வடிவமும் பொருந்தியிருக்கும். சுற்றி, சித்திரம்செதுக்கிய கற்றூண்களாலாகியவேலியும், நாலுபக்கமும் நான்கு நெடிய மகரதோரணவாயில்களும் பொருந்தியிருக்கும். வாயில்கள் அத்யற்புதமான சிற்பப்பணி வாய்ந்தவை.

வாயில்நிலை உத்தரக்கற்கள் கல்வேலிகள் முதலியவை கொத்துமான முடையனவாய்ப் புத்தஜாதகக்கதைமுதலிய ஐதிகசித்திரபிம்பங்களை யுடையனவாயிருக்கும்.

1. ஸஞ்சிஸ்தூபி:—இது, நல்லநிலைமையிலிருக்கிறது. ஆதியில் 78 அடி உயரமிருந்தது. இப்போது மேல்நிற்பவை இடிந்துபோய் 54 அடி உயரமுள்ளதாயிருக்கிறது. 2. பர்ஹுத்ஸ்தூபி:—இது சுட்டசெங்கல்லாற் கட்டப்பட்டது. கல்வேலியிலுள்ள சிற்பங்கள் அழகியவை. ஜாதகக்கதைகள் சித்ரரூபமாய்ச் செதுக்கப்பட்டுள்ளன. 3. ஸாரநாதஸ்தூபி:—இது காசிக்கருகிலுள்ளது. செங்கல்லாலாயது. 4. கயாஸ்தூபி:—இங்கிருந்த ஸ்தூபி இடிந்துபோய் வேலிக்கற்கள்மாத்திரம் காணக்கிடக்கின்றன. கட்டிடத்தின் ஒரு புறத்தில் ஸ்தூபியும் வேறொருபுறத்திற் புத்தர்கோயிலுமடங்கிய கட்டிடத்திற்குச் சைத்தியம் என்று பெயர். இவை பிற்காலத்துக்கட்டிடம். ஏனென்றால் அசோகன் காலத்திற் புத்தவிக்கிரகமும் அதற்கு ஆராதனமும் ஏற்படவில்லை. ஆனால், போதிவிருட்சம், தருமசக்ரம், பாதசின்னம் முதலிய மத அடையாள வணக்கப்பொருள்கள்மாத்திர மிருந்தன.

III. குகைகள்:—இவை, பலதுறவிகள் சேர்ந்து வசிக்கப் பெரிய அறைகளாகக்குடையப்பட்டவை. கயைக்கருகில் மூன்றுகுகையறைகள் அசோகனாற்குடையப்பட்டன. குகையறையின் சுவர்கள் கண்ணாடிபோல் மெருகிடப்பட்டிருக்கும்.

IV. ஸ்தம்பங்கள்:—இவற்றிற் பன்னிரண்டு காணப்படுகின்றன. அவற்றிற் பத்தில்மாத்திரம் லிகிதம் பொறிக்கப்பட்டுள்ளது. டில்லி, பிரயாகை, ஸாரநாதம், ஸஞ்சி, புத்தாவதரித்த ரும்மின்தேயி—இவற்றிலுள்ள ஸ்தம்பங்கள் முக்கியமானவை. ஸ்தம்பங்கள் 40 அல்லது 50 அடி உயரமுள்ளவை. ஒவ்வொன்றும் அடிப்பீடமும் மணிவடிவமைந்த கழுத்தும் கனத்த பலகையும் (கல்) கருடன், ரிஷபம், சிம்மம் போன்ற ஏதேனுமொரு பிராணிசின்னமு முடையது. மத்தியபாகம் உருக்கோ அல்லது வேறு லோகமோ என்று பார்த்தோர் மயங்கும்படி யிழைத்து மெருகிடப்பட்டிருக்கும். சாரநாதஸ்தம்பத்தின் மேற்பாகத்தில், தருமசக்கிரங்களை ரிஷபங்கள் இழுத்துச்செல்வது போலவும், சிங்கங்கள் மேலிருந்து உருட்டுவதுபோலவும் உருவங்கள் காணப்படுகின்றன.

**அசோகன் சாசனங்கள்:**—அசோகன் காலத்துக்குமுந்தியே அந்நிய நாட்டு அரசர்கள் தங்கள் கொள்கைகளைச் சாசனங்களின்மூலமாய்த் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவைகள் கற்களிற்செதுக்கப்பட்டவையல்ல. மண் ஓடுகளில் எழுதிச் சுட்டு அடுக்கிவைத்தவை. அவைகள் அஸிரியா, சால்தியா, பாரசீகம் முதலிய தேசங்களிற் காணப்பட்டன. அவ்வெழுத்துக்களுக்கு முனை(ளை)யெழுத்துக்கள் (cuneiform Inscriptions) என்றுபெயர். அவைகளிற் சில, நன்னெறியைப்போதிப்பனவுமுண்டு. அவற்றைப்பின்பற்றி அசோகனும் உபதேச சாசனங்களையேற்படுத்தினான்போலும். அசோகனுக்குப் பின்வந்த அரசர்களின் சாசனங்களோ தானவிஷயமானவை. அசோகசாசனம் இந்தியாவிற் காணப்படும் சாசனங்களிலெல்லாம் முந்தியது. நன்னெறிகளைத்தெரிந்துகொள்வதற்கும், பௌத்தமதசரித்திரத்தைத் தெரிந்துகொள்வதற்கும், அக்காலத்தில் வடஇந்தியர்கள் பேசிவந்தபாஷையின் தன்மையையறிவதற்கும், அதற்கும் ஸம்ஸ்கிருதத்துக்குமுள்ள சம்பந்தங்களையறிவதற்கும், தமிழில் வழங்கும் சில தத்பவங்கள்(ஆணை கண்ணன், மோக்கம் சிங்கம் முதலியவை)இச்சாசனபாஷைச்சொற்களேயென்பதை யறிவதற்கும் இச்சாசனங்கள் பயன்படுகின்றன. மேலும், இவை, அசோகனுடைய அளவுகடந்த கருணையைக் காட்டுகின்றன. அக்காலத்துஜனங்களின் ராஜாங்கரீதி, மதம், சிற்பமுதலிய நாகரீகத்தன்மைகளை இவற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இச்சாசநங்களின் விஷயமான ஆராய்ச்சி தொடங்கிற்று. கிழக்கிந்தியா கம்பனியாரின் நாணயபரிசோதகராகிய 'பிரின்ஸப்' என்பவர், இவ்விஷயமான ஆராய்ச்சிக்காரரில் முதல்வர். கி.மு. 200 முதல் கி.பி. 100 வரை, இந்தியாவின் வடமேற்குப் பாகங்களிலாண்ட அரசர்களின்நாணயங்கள் சில, இவருக்குக் கிடைத்தன. அவற்றில் ஓர் ஓரத்தில் கிரேக்கஎழுத்துக்களும், மற்றவோரத்தில் அவற்றிற்குச்சரியான அசோகசாசன எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. கிரேக்கஎழுத்துக்களின் மூலமாய் அசோகசாஸன எழுத்துக்களைச் சுலபமா யறிந்துகொள்ளலாயிற்று.

மேற்சொன்ன பிரின்ஸப், கன்னிங்காம், பார்கெஸ், பூலர், ஸெனாட் பொர்னுப் முதலிய மேனாட்டுப் பண்டிதர்களும், ராமகிருஷ்ணபந்தர்

கார், பகவன்லால் இந்திராஜீ முதலிய சுதேசபண்டிதர்களும் இவ் விஷயத்தில் உழைத்தார்கள்.

இச்சாசனங்கள் எழுதப்பட்டுள்ள பாஷைக்குப் பெயர் பாலி. இப்பாஷை வடமொழித்திரிபு. இது அக்காலத்தில் வடஇந்தியாவில் பேச்சுவழக்கிலிருந்ததாகத்தெரிகிறது. இச்சாசனங்கள் இரண்டுவித மானஎழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் ஒருமாதிரிக்குக் கரோஷ்டி யென்றும் மற்றொருமாதிரிக்குப் பிராமி யென்றும் பெயர். இவற்றுள் முந்திபலிபி யவன் சம்பந்தமுடைய வடமேற்கு இந்தியப் பிரதேசங்களிற் காணப்படுகிறது. அது உருது, அரபி, ஹிப்ரு முதலிய ஸெமட்டிக்பாஷையெழுத்துக்களைப்போல் வலது பக்கத்தில் ஆரம்பித்து இடதுபுறம் நோக்கி எழுதப்படுவது. பிந்திச்சொன்ன பிராமிஎழுத்து அன்னிய சம்பந்தமில்லாத சுத்த இந்தியரின் உப யோகத்துக்காக எழுதப்பட்டது. இது உட்பிரதேசங்களிற் காணப் படுகிறது. இது நம்முடைய தமிழ்முதலிய மற்ற இந்தியபாஷை எழுத்துக்களைப் போல் இடதுபுறத்திலிருந்து எழுதப்படுவது. இப் போது இந்தியாவில் வழங்கும் பலவிதமான இந்தியபாஷையெழுத்துக்க ளெல்லாம் இப் பிராமியிலிருந்து உண்டானவையென்று அநேகர் கருது கிறார்கள். இவ்வெழுத்து மத்தியகாலத்தார்க்கு வாசிப்பது கஷ்டமா யிருந்தது. ஆதலாற்றான் மத்தியகாலத்தில் எழுதப்பட்ட வடமொழி ஆக்கியாய்ன ஆக்கியைகளின் கதாநாயகர்களின் வித்தைச்சிறப்பைச் சொல்லும்போது பிர்ம்மலிபிதெரிந்தவரென்று கூறியிருக்கிறது. தமிழ்நாட்டிலும் விளங்காத எழுத்துக்களை 'இவை பிர்ம்மலிபியா யிருக்கின்றன' என்பர். இச்சாசனங்களெல்லாம் பாலிபாஷையேயாயினு லும் இடத்திற்குத்தகுந்த பாஷாவித்தியாசம் சிறிதுண்டு. கிர்நார் சாசனத்திற் காணப்படும் மேற்குமொழி, தௌளி யென்னுமிடத்திற் காணப்படும் கிழக்குமொழி, ஷாபர் ஸ்கா ஹியிற்காணப்படும் வடமேற்கு மொழி யென அவற்றை மூன்றுவிதமாகப்பிரிக்கலாம்.

இச்சாசனங்களெல்லாம் 'தேவர்களுக்குப்பிரியனான பிரியதர்சி ரா ஜன் இப்படிச்சொல்லுகிறான்' என்று பொருள்படும் 'தேவாநாம்பியெ, பியதசி, ராஜா, ஏவம் ஆஹ'' என்று ஆரம்பித்திருக்கும். இச்சாசனங் களிலெல்லாம் 'தேவாநாம்பிய', 'பியதசி', 'தேவாநாம்பியபியதசி' என்ற

பெயர்கள் மாத்திரம் காணப்பட்டபடியால், இவைகள் அசோகசம்பந்த முடையனவோ அல்லனவோ என்ற சந்தேகம் வெகுகாலம்வரை நீங்காமலிருந்தது. கடைசியாக 1915-ம் ௵த்தில் ரெயிச்சூருக்கு அருகிலுள்ள மாஸ்கி என்னுமிடத்திலிருந்து கிடைத்த கல்வெட்டில் அசோகன் என்ற பெயருமே வரையப்பட்டிருந்ததால் அந்த ஆசங்கை நீங்கிற்று.

சாசனங்களின் நோக்கம்:—சில அதிகாரிகளுக்குக் கட்டளை, சில தன் சந்ததியாருக்கு எச்சரிக்கை, சில ஜநங்களுக்குத் தன் செய்கையை விளக்குவன, சில புத்தரின் வாழ்க்கைசம்பந்தமான விசேஷசம்பவங்களைக் குறிக்கும் ஞாபகக்குறிப்புகள், சில குகைக்கட்டிடங்கள் உண்டாக்கித் தானம்செய்ததைக்குறிப்பன. அநேகமானவை ஜனங்களுக்குத் தருமத்தை வற்புறுத்துபவை.

இச்சாசனங்களுட் சில ஸ்தம்பங்களிலும் சில பாறைகளிலும் சில குகைமண்டபங்களிலும் வெட்டப்பட்டவை.

நமக்கு இதுவரைகிடைத்துள்ள அசோகசாசனங்களின் மொத்தத் தொகை 140. இவற்றை ஒன்பதுவகையாக வகுக்கலாம்.

ஒன்பதுவிதச் சாசனங்களாவன:— 1. உபசாசனங்கள் (2). 2. ஸ்தம்பசாசனங்கள் (7). 3. முக்கிய சாசனங்கள் (14). 4. பாப்ரு சாசனம் (1). 5. கலிங்கசாசனங்கள் (2). 6 சாரநாதசாசனம் (1). 7, ஸ்மாரகலேகனங்கள் (2). 8. ராணிகாருவாகியின்லேகனம் (1). 9, தானலேகனங்கள் (3).

I. உபசாசனங்கள் (2). இவை முதன்முதலில் வெளியிடப்பட்டவைபோலும். அவன் அரசாட்சியின் பதின்மூன்றாம்வருஷத்தெழுதியவை. முதல் உபசாசனத்தில் இவன் மெல்ல மெல்லப் பௌத்தனானதும், புத்தமதத்திற் றான் கற்ற பாடங்களிவையென்பதும், அறநெறியில் உழைப்பும் ஊக்கமும் விசுவாசமும் இருக்கவேண்டுமென்பதும், கூறப்படுகின்றன. முதல் உபசாசனமுள்ளவிடங்களாவன:— ரூபநாதம், ஸஹஸ்ராரம், பெய்ராத், சித்தபுரம், பிர்ம்மகிரி, ஜடிங்கிராமேசுரம், மாஸ்கி என்பன. 2-வது உபசாசனம், மைசூரில் மூன்று இடங்களிற் காணப்படுகின்றன. முதல் உபசாசனத்திலிருந்து இவன் இரண்டரை வருடம் உபாசகனாயிருந்து பின்பு சங்கத்திற்சேர்ந்து அப்போது ஒரு

வருடமாயிற்று என்று தெரிகிறது. 2-வது உபசாசனத்தில், தாய் தந்தையருக்குப் பணிவிடை, ஜீவப்பிராணிகளிடத்தில் அநுதாபம், ஆசாரியனிடத்திற் • பணிவு, சத்தியம் இவை ஜனங்களுக்கு அவசியமென்று கூறியிருக்கிறது.

II. ஸ்தம்பசாசனங்கள், அரசனது அரசாட்சியின் தன்மையைப்பற்றியும் கொள்கைகளைப்பற்றியும் கடைசிமுறையாகப் பிரசுரம் செய்யப்பட்டவை. இவை அவன் அரசாட்சியின் 27, 28 வது வருடங்களிற் பிரசுரமானவை. பூர்வீக அரசன் செய்த பலகட்டளைகளை உறுதி செய்ய இவை பிரசுரம்செய்யப்பட்டனபோலும். அவன் அரசாட்சியின் தன்மை, அவன் எல்லாரிடத்திலும் ஒரேமாதிரியாக நடந்துகொண்டு வரும் தன்மை, எல்லாருக்கும் 'அடக்கமுடைமையின் அவசியம்' ரஜுகரின்வேலை, பிராணிஇம்சைநிவாரணச்சட்டங்கள், 'ஸமாஸபாவனையின் ஆவசியகதை' முதலியவைகள், முதல் ஆறு சாசனங்களின் உள்ளுறை பொருளாம். ஏழாவது சாசனத்தை அசோகன்செய்த சீர்திருத்தங்களின் தொகுப்புரையெனலாம். அதனால் அவன் கடைசியாகத் தனது ஜனங்களிடம் விடைபெற்றுக்கொள்வதுபோலத் தோன்றுகிறது. இச்சாசனங்கள் எழுதப்பட்டுள்ள ஸ்தம்பங்களாவன:—1. டில்லி–தோப்ரா ஸ்தம்பம். 2. டில்லி–மீரத் ஸ்தம்பம். 3. பிரயாகை ஸ்தம்பம். 4. லௌரியா–அர்ராஜ் ஸ்தம்பம். 5. லௌரியா–நந்தனகாஸ்தம்பம், 6. ராம்பூர்வா ஸ்தம்பம்.

2-ம் ஸ்தம்பசாசனத்தில், அவன் செய்திருக்கும், தண்ணீர்ப்பந்தல்முதலிய, பலநற்செய்கைகள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 3 வது ஸ்தம்பசாசனத்திற் கொடுமை,* கயமை, கோபம், அகம்பாவம், பொறாமை முதலியவை பெருங்கேட்டுக்குக் காரணமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 4-ம் ஸ்தம்பசாசனம் ஜனங்களின் நடத்தை ரஜுகரால் கண்காணிக்கப்படுமென்பதைத் தெரிவிக்கிறது. 5-வது ஸ்தம்பசாசனம் பிராணிகளைக் கொல்லக்கூடாது என்பதைத் தெரிவிக்கிறது. 'சூடிடுதலும் விரையடித்தலும் கூடாது'. 'அஷ்டமி, தைப்பௌர்ணமி முதலிய திதிகளிலும், புனர்பூச பூச நட்சத்திரங்களிலும், மூன்று சாதுர்மாசியப்பிறப்புத்தினங்களிலும் உபவாசமிருக்கவேண்டும்' என்றவிஷயங்களும் காணப்படுகின்றன.

**III.** பதினுன்கு முக்கிய சாசனங்கள்:—இவை, அவனது 13, 14-வது ஆண்டுகளிற் பிரசுரம் செய்யப்பட்டவை. அவன் தர்மத்தையும் நோக்கத்தையும் விவரிக்கின்றன. ஷர்பாஸ்கர், மான்ஸரா இந்த இரண்டிடங்களிலும் கரோஷ்டி எழுத்தில் சாசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. கால்சீ, கிர்நார், தவுளி, ஜௌகட என்னுமிடங்களில் பிராமி அட்சரசாசனங்கள் காணப்படுகின்றன. முதற் சாசனத்தில் 'பலி யாகங்களுக்காகக்கூட பிராணிவதைசெய்யக்கூடாது. ஸமாஜ விருந்து விலக்கப்படவேண்டும்' என்பவைகளைப்பற்றியும், தான் அதுவரை செய்துவந்த மூன்று பிராணிவதையுங்கூட நிறுத்தப்படுமென்பதைப்பற்றியும் சொல்லியிருக்கிறது. 2-ல் அவன் ஆளுகைக்குட்பட்ட நாட்டிலமாத்திரமேயல்லாமல் சோழ பாண்டிய ஸத்யபுத்ர கோளபுத்ர, தாம்பபந்நி நாடுகளிலும் அன்டியோகஸ் என்னும் யவனராஜனின் அண்டை நாடுகளிலும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்திய சாலை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தையும், அதற்காக மருந்து மூலிகைகள் பயிரிடவேண்டிய அவசியத்தையும், அற்பாகாரத்திற்காகக் கனி காய் கிழங்குகள் பயிரிடப்படவேண்டிய அவசியத்தையும்பற்றிச்சொல்லியிருக்கிறது. 3-ல் யுக்தர் முதலிய உத்தியோகஸ்தர்கள் ஐந்து வருடத்துக்கொருதாம் 'அநுஸம்யாநம்' செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றியும், செலவிற் சிக்கனம் செல்வத்தைக்கருதாமை முதலிய குணங்களை மேற்கொள்ளவேண்டுமென்பதைப்பற்றியும் சொல்லியிருக்கிறது. 4-ல், யானைவிழா, தேர்விழா, லட்சதீபவிழா முதலிய விழாக்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. 5-ல் மேற்கெல்லைப்புறமுள்ள யவனர், காம்போஜர், காந்தாரர், ராஷ்டிரிகர், பிதேனிகர் முதலியவர்களுக்குத் தர்மமகாமாத்திரர் தர்மோபதேசம் செய்வதைப்பற்றிச் சொல்லியுளது. 6-ல் போஜந, சயந, ஸவாரி சமயங்களிலும் தன்னை ஜனங்கள் வந்துபார்த்துச் சங்கடங்களைத் தெரிவித்துக்கொள்ளலாம் என்கிறுன். 7-ல் எல்லாமதத்தோரும் சேர்ந்துவாழவேண்டுமென்றும், அடக்கமுடைமை மனத்தூய்மை செய்ந்நன்றியறிதல் ஸ்திரபுத்தி இவை உயர்வைத்தருமென்றும் சொல்லுகிறுன். 8-ல் வேட்டையாடுதலைத் தான் ஒழித்ததைப்பற்றியும், தான் முடிசூடிப் பத்துவருடமானபின் ஸம்போதியைப் பின்பற்றினதைப்பற்றியும் சொல்லுகிறுன். 9-ல் 'சடங்கிலும் தர்மம் சிறந்தது' என்றும், அடிமைகளையும் சேவகர்களையும் அன்புடன் நடத்த

வேண்டுமென்றும், ஈகை மேன்மைபானது என்றும் சொல்லுகிறான். 12-ல் சமாஸபாவம் கூறப்பட்டிருக்கிறது. 13-ல் யுத்தத்தில் பிரிவு, துன்பம், சிறை, கொலை முதலியவற்றால் வருந்தின ஜனங்களுக்காக வருந்துகிறான். சகல ஜீவராசிகளுக்கும் அடக்கம் அமைதி சமாதானம் சந்தோஷம் முதலியவை கிடைக்கவேண்டுமென்பது தனது விருப்பமென்கிறான். 600 யோசனைக்கப்பாலுள்ள அரசன், அந்தியோக்கன் நாட்டிலும், அந்தியோக்கனுக்கு அப்பாலுள்ள துலமாயன் அந்தேகினன் மகான் அலகஸந்தரன என்ற பெயரையுடைய நால்வர் ராஜ்யங்களிலும், தெற்கிற் சோழ பாண்டிய தாம்பிரபரணி முதலிய பலநாடுகளிலும், அரசனது ஏகாதிபத்தியத்துமாகாணங்களிலுள்ள யவனர் காம்போஜர் நாபாகதேசத்து நாபபந்தியர் போஜர் பிதேனிகர் ஆந்திரர் புளிந்தர் முதலிய ஜனங்களின் நாட்டிலும், எங்கும், தனது தர்மபோதனையைச் செவியுற்று, மனிதர் அதைப் பின்பற்றிவருகிறார்கள் என்கிறான். தனது புத்ரபௌத்ரர் 'நாடுகளின்வெற்றியை நாடாமல் தர்மத்தின் வெற்றியையே நாடவேண்டு' மென்கிறான்.

IV. பாப்ருசாசனம்:—இது, அசோகன் பௌத்த சங்கத்தலைவருக்கு எழுதியகடிதம். இதில் தன்னை மகதவரசனென்கிறான். சங்கத்தை நமஸ்கரிக்கிறான். புத்தரின் தர்மம் சங்கம்முதலியவைகளிடத்துள்ள விசுவாசத்தைத் தெரிவிக்கிறான். 'புத்தர் கூறியவை சிரேட்டம். ஸத்தர்மம் சாசுவதமாய் நிலைநிற்கும்' என்கிறான். திரிபிடகபாகங்களின் பெயர்கள் சில இதிற் குறிப்பிடப்படுகின்றன.

V. கலிங்கசாசனம்:—இவை தவுளி, ஜவுகட என்னுமிடங்களிற் பதினான்கு விஷயங்களில் 11, 12, 13-க்குப் பதிலாக எழுதப்பட்டிருக்கின்றன. ஜயிக்கப்பட்ட ஜனங்களுக்கும் காட்டு ஜாதியாருக்கும் அபயப்பிரதானம் செய்கிறான். பொறாமை, சோம்பல், அவசரம், இரக்கமின்மை, மனத்தளர்ச்சி, சோர்வு, கவனமின்மை இவை மனிதருக்கு ஆகா என்கிறான். உஜ்ஜயினி தக்கசிலை இவற்றில் இவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தமை தெரிகிறது. தொசாலி, சமாபா என்ற இரண்டு ஊர்களும் கலிங்கத்தில் இவன்காலத்தில் முக்கியமானவை. ஜநங்களுடைய குற்றங்களைப் பொறுத்துக்கொள்வதோடுகூட அவர்களுக்குச் சுகத்தையும்விரும்புவதாகக் கூறுகிறான்.

சாதுர்மாசிய தினங்களிலும் பூச நட்சத்திரத்தன்றும் தன்னுடைய தர்மசாசனங்களைப் பாராயணம்பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறான்.

VI. சாரநாதசாசனம்:—ஸாரநாதம் காசிக்கருகிலுள்ளது. இவ்விடத்தில் புத்தர் தர்மத்தைப் பிரசாரம்பண்ண ஆரம்பித்தார். அசோகன் பௌத்தசங்கத்தலைவனாயிருந்தான் என்று தெரிகிறது. இச்சாசனம் மூன்றாவது பௌத்தமகாசபையின் சம்பந்தமுடையதுபோலும். சங்கத்திற் பிளவுகளைச்செய்தல் கூடாதென்கிறான்.

VII. ஸ்மாரகலேகனங்கள்:–நீக்லீவா என்னுமிடத்திற் பூர்வீக புத்தராகிய கோனாகமனரின ஸ்தூபியை இரண்டாந்தரம் விசாலமாகக் கட்டி அவருக்குப் பூசை விழா முதலிய நடத்தினான். தனது 20-வது வருஷத்தில் ரும்மின்தேவியில் சாக்கிய புத்தமுனிக்கு அவதார ஞாபகார்த்தமாகக் கல்ஸ்தம்பம்நாட்டிக் கல்வேலியும் அமைத்தான். அந்த உலும்பினிக்கிராமவாசிகள் (வேறு யாதொரு சில்லரைவரியுமில்லாமல்) விளைவில் எட்டிலொருபங்கு கொடுத்தாற் போதுமென்று ஏற்பாடு செய்தான்.

VIII. ராணிகாருவாகியின்லேகனம்:—இது பிரயாகை ஸ்தம்பத்திலுள்ளது. இவள் இரண்டாவது ராணி. இவள் சத்திரம், உத்தியானவனம் முதலியவைகளை ஏற்படுத்தினாள். இவள் பெயராவது இவள் மகன் தீவரனின்பெயராவது ஐதிஹ்ய நூல்களிற்காணப்படவில்லை.

IX. தானசாசனங்கள்:—கயையின் அருகிலுள்ள பாராபர், நாகார்ஜுனிமலைகளில் அசோகனாலும் பாடலித்தசரதனாலும் ஆறுகுகை மண்டபங்கள் குடையப்பட்டன. இவைகளில் மூன்றை அசோகன் ஆசீவகத்துறவிகளுக்குத் தானம் செய்தான். (அசீவகரின் ஆசாரங்களைப் பௌத்தர் பரிகசிப்பர்). குகைமண்டபங்களினுட்புறச்சுவர்கள் மெருகிடப்பெற்றுக் கண்ணாடிபோல் விளங்குகின்றன.

தர்மப்ரசாரம்:—தர்மம் அல்லது நல்லொழுக்கத்தைப் பிரஜைகளிடம் பரவச்செய்வதில் அளவற்ற சிரத்தை யெடுத்துக்கொண்டான். 'தர்மத்தைப் பரவச்செய்வது அரசருக்கு வெற்றியாகுமேயொழிய நாடு நகரங்களை ஜயிப்பது அவர்களுக்கு வெற்றியாகாது' என்றான். இவன் தர்மமகாமாத்திரர், ரஜூகர் என்னும் அதிகாரவர்க்கத்தினரையேற்

படுத்தி ஜனங்களிடம் தர்மம் குன்றாதபடி அவர்களைக்கொண்டு ஜாக்ரதை யாய்க் கண்காணித்து நல்லொழுக்கத்தை நாட்டிற் பரவச்செய்தான். 'மதத்திலும் ஒழுக்கமே சிறந்தது' என்ற கொள்கையுடையவன். ஸிரியா தேசத்து ஆண்டிபோகஸ் II, எகிப்துதேசத்துப்டாலமிபாஸ், மாஸிடோனியா தேசத்து அன்டிகோனஸ், கைரினே தேசத்து மகாஸ், எப்பைரஸ்தேசத்து அலெக்சாண்டர் முதலிய அன்னியநாட்டரசர் களுக்கும் சோழன் பாண்டியன் கேரளன் சிங்களவரையன் முதலியவர் களுக்கும் தூதர்களையனுப்பித் தன்னுடைய தர்மக்கொள்கைகளை அவ் வரசர்களும் கைக்கொள்ளும்படிக்கும் அவர்கள் தேசத்திலும் தர்மம் நின்றுநிலவும்படிக்கும், ஏற்பாடுசெய்தான். யவனர், காம்போஜர், நாப பந்தியர், போஜர், பிதேனிகர், ஆந்திரர் முதலானவர்களும் தர்மத்தைக் கைக்கொள்ளலாயினர். தாய்தந்தையரிடத்து சுசுரூஷை, வயோதிகர் உபாத்தியாயர் ஆசார்யர் இவர்களிடத்துப் பணிவு, பிராமணர் சமணர் களுக்குக் கொடை, ஏழை அநாதைகளை இரக்கத்துடன்நடத்தல், அடி மைகள் வேலைக்காரர்கள் இவர்களிடம் பட்சமாயிருத்தல், ஜீவராசி களிடம் இரக்கம், ஸர்வமதசம்மதம், தர்மசாசனங்களைப் பாராயணம் செய்தல், ஒளதார்யம், சத்தியம், பரிசுத்தம், உபவாசம், செலவிற் சிக் கனம், செல்வத்தைக்கருதாமை, அடக்கம், நன்றியறிதல் முதலிய நற் குணங்கள் சிறந்த தர்மங்களாகக் கூறப்பட்டுள்ளன. கொடுமை, கயமை, கோபம், அகம்பாவம், பொறாமை, சோம்பல், அவசரம், இரக்கமின்மை, சோர்வு, புலாலுண்ணல் முதலியவை ஆகாவாம். சூடிடுதல், விரையடித் தல் முதலிய கொடுந்துன்பங்களைப் பிராணிகளுக்குச் செய்யக்கூடாது. கருணையும் ஈகையும் முக்கியதர்மங்கள்.

மதப்ரசாரம்:— அசோகன் பௌத்தமதத்தைச்சேர்ந்தவன். முதல் உபசாசனத்தில், புத்தமதத்தில் தான் சிலவற்றைக் கற்றதாயும், மெல்ல மெல்லத் தான் பௌத்தனானதாயும், முதலில் $2\frac{1}{2}$ வருடம் உபாசகனா யிருந்து பின் சங்கத்திற் சேர்ந்ததாயும் சொல்லுகிறான். தான் முடி சூடி 10 வது ஆனபின் ஸம்போதியைப் பின்பற்றினதைப்பற்றிப் பதி னான்கு முக்கிய சாசனங்களி லெட்டாவதிற் சொல்லுகிறான். அசோக னுக்குப் புத்தரிடத்திலிருந்த ஈடுபாடு, பாப்ருசாசனத்திலிருந்து வெளி யாகிறது. அதில், பௌத்தமதாத்நத்ரயத்தில் தனக்குள்ள விசுவா சத்தைத் தெரிவித்து 'புத்தர் கூறியவை சிரேட்டம்' என்றும் சொல்லு

கிறன். திரிபிடகபாகங்களின் பெயர்கள் சில அதிற் கூறப்பட்டிருக்கின்றன. தான் பட்டத்துக்குவந்த பன்னிரண்டாவதுவருடத்தில் துறவியாய், 'அர்ஹத்' என்னும் பதத்தை யடைந்து; சங்கத்தலைவனுய், ஜநகனைப்போல், ராஜாங்கத்தலைவனுயும் அரசாண்டான். உபகுப்தனென்னும் பௌத்தபிக்ஷுவை ஆசார்யனுய்க்கொண்டு அவனிடம் உபதேசம்பெற்றுப் பௌத்தபிக்ஷுக்களுக்கு உபகரித்தான். சங்கத்திலேற்பட்ட சில அபிப்பிராயபேதங்களையும் பிளவுகளையும் நீக்கப் பாடலிபுரத்தில் குக்குடாராமத்தில் மோகலிபுத்ர திஸ்ஸனைக்கொண்டு கி. மு. 240ல் மூன்ருவது பௌத்தமகாசங்க மேற்படுத்தினன். அப்போது திரிபிடகம் உருவாக்கப்பட்டது. நிக்லீவா என்னுமிடத்திற் பூர்வீக புத்தராகிய கோனுகமனரின் ஸ்தூபியை இரண்டாந்தரம் விசாலமாகக்கட்டி அவருக்குப் பூஜை விழா முதலியன நடத்தினன். தனது 20-வது ஹூத்தில் ரும்மின்தேவியில் (உலும்பினிவனம்) சாக்கியபுத்தமுனிக்கு அவதார ஞாபகார்த்தமாகக் கல்ஸ்தம்பம் நாட்டி அக்கிராமவாசிகளுக்குத் தீர்வையை மிகவும் குறைவாக ஏற்படுத்தினன். மேலும், புத்தர் ஞானமடைந்த கயா, முதன்முதல் தருமோபதேசம்செய்த சாரநாதம், அவர் அநேககாலம்வசித்த சிராவஸ்தி முதலிய இடங்களுக்குச் சென்று அங்கங்கே அவருக்கு ஞாபகச்சின்னங்களை யேற்படுத்தினன். தன் சகோதரன் மகேந்திரனையும் சகோதரி சங்கமித்திரையையும் மதப்ரசாரத்தின்பொருட்டு சிம்மளத்தீவிற்கனுப்பினன். அவர்கள் இங்கிருந்து போதிவிருக்ஷத்தின் கிளையைக்கொண்டுபோய் அங்கு நட்டு வளரச்செய்தார்கள். அவன் மகன் குணலனுல் கோட்டான்தேசத்தில் பௌத்தமதம் பரவ ஆரம்பித்தது.

அசோகன்காலத்திற் புத்தருக்கு விக்கிரகங்கள் கிடையா. போதிவிருட்சம், தருமசக்ரம், புத்தபாதம் முதலிய அடையாளங்களேயுண்டு. பிறப்பு இறப்பு மூப்புப் பிணி இவற்றிலிருந்து விடுபடுதலே மதத்தின் முக்கியநோக்கம்.

அசோகன் தான் பௌத்தனுயிருந்தும் மற்ற மதங்களைத் தூஷிக்கவில்லை. ஒவ்வொருமதத்திலும் சில மேன்மைக ளிருக்கக்கூடுமென்று நம்பினன். பௌத்தரல்லாதாரை வெறுக்கவில்லை. பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதையும் உதவியும் செய்யவேண்டுமென்று அடிக்கடி

சொல்லுகிறான். ஜனங்கள் மதசமரஸபாவனையுடையவர்களாய்ச் சேர்ந்து வாழவேண்டுமென்பதை அதிகமாய் விரும்பினான். பௌத்தர்களால் இகழப்பட்டவர்களாகத் தெரிகிற ஆசீவகர்களுக்கு, வசிக்கக் குகைமடங்கள் உண்டாக்கித் தானம்செய்தான்.

பௌத்தமூலநூல்கள்:—ஸம்ஸ்கிருதத்திற் பல பழைய பௌத்த நூல்களிருந்தபோதிலும், இங்குக்கூறுவது பாலிநூல்களைப் பற்றியேயாம். கிறிஸ்துவுக்குப்பின் அவர்சீடர்கள் அவருடைய உபதேசங்களைப் பிற்காலத்திற் றிரட்டியெழுதியதுபோல, புத்தருக்குப்பின் அவருடைய சீடர்கள், ஞாபகத்திலிருந்ததைப் பிற்காலத்தில் எழுதிவைத்தார்கள். ஆதலால், பௌத்தர்களிற் சிலர் மறுக்கக்கூடிய பாகங்களும் அவற்றிலுண்டு. பிற்காலத்தார் அவைகளை மூன்றுவிஷயபாகங்களாக்கி, மூன்றுகூடைகளி லடங்கும்படிசெய்தார்கள். அவற்றிற்குத் திரிபிடகமென்று பெயர். இது புத்தகத்திற் சுமார் 7000 பக்கம் கொள்ளக்கூடியது. பைபிளைப்பார்க்கிலும் மூன்று பங்கு பெரிது. 29 கிரந்தங்களையுடையது. இவற்றிற் சில, உரைகள். இவற்றிற் கூறப்படும் சமயக் கொள்கைகளுக்குத் 'தேரவாதம்' என்று பெயர். இவற்றிற் சிலபாகங்களின் பெயர்கள் அசோகசாசனங்களிற் குறிப்பிடப்படுகின்றன. இத்திரிபிடகங்களிற் புத்தரின் சரித்திரம் அதிகமாய்க் காணப்படாது. அவர் தருமோபதேசங்களே காணப்படும். உரைகள் சூத்தம் அல்லது சூத்திரங்களென்று சொல்லப்படும். அநேகசூத்திரங்கள் வினாவிடை ரூபமானவை. திரிபிடகம் விநயபிடகம், சூத்தபிடகம், அபிதர்ம்மபிடகமென மூன்றுவகைப்படும்.

விநயபிடகம்:—இது, பௌத்தபிக்ஷுக்களுடைய ஒழுக்கமுறையையும் நித்தியநியமங்களையும் உரைக்குங்கிரந்தங்களின் தொகுதியாம். சங்கத்திலிருந்து விலக்குதற்குரிய குற்றங்கள், பிராயச்சித்தத்திற்குரிய குற்றங்கள், சங்கப்பிரவேசம், பிக்ஷுக்களின் ஊண் உடை அனுஷ்

டானம், முதலியவை இவற்றிற் கூறப்படும். இவற்றில் உரைகளுமுண்டு. இதனுள் 'தர்மசக்ரப்பிரவர்த்தனம்' என்னும் பாகம் முக்கியமானது.

சூத்தம் அல்லது சூத்ர பிடகம்:—இது, தர்மத்தை விளக்குவதற்கான சம்பாஷணைகளும் வாதங்களும் பிரசங்கங்களுமடங்கியதாகும். இது ஐந்து நிகாயம் அல்லது பிரிவையுடையது. புத்தர் அந்தியகால உபதேசமாகிய 'மகாபரிநிர்வாணசூத்திர'மும் பூர்வபுத்தர்களின் கதையாகிய 'ஜாதகக்கதை'களும் இதைச்சேர்ந்தவை. ஜாதகக்கதைகளின் தொகை 419. இப்பிடகத்தின் முக்கிய பாகமாகிய 'தம்மபதம்' 423 அழகிய நீதிவாக்கியங்களையுடையது.

அபிதர்ம்ம பிடகம் :—இதிற்கூறப்படுபவை அநேகமாய்ச் சூத்த பிடகத்திலடங்கியவைகளே. பிற்காலத்தவை பல இதிலுண்டு. இவையெல்லாம் தென்னாட்டுப் பௌத்தருடைய மறைநூல்கள். வடக்கேயுள்ள பௌத்தர்களிடத்தில் இந்நூல்கள் முழுவதுமங்கிடையா. ஆனால் இங்குக் காணப்படாத வேறுபலநூல்கள் அவர்களிடம் காணப்படும். மேற்சொல்லியவைகளில் அசோகனுக்குப் பிற்காலத்திலுண்டானவைகளுமுண்டு. இலங்கை பர்மா முதலிய தென்பௌத்தநாடுகளில் இவற்றிற்கு வியாக்யான கிரந்தங்களுமிருக்கின்றன. இவ்வியாசத்தில், முன்கூறிய சிலவிஷயங்களையே, பின்னும், தகுதிநோக்கி அங்கங்கே எழுதியுள்ளேன்.

வித்வான் A. M. சடகோபராமாநுஜாசார்யன்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதன்,
கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.

ஸ்ரீ:

# மதிப்புரை.

தமிழகராதி (மூன்றாம்பகுதி):—சென்னைச் சருவகலாசங்கத்தின் ஆதரவில் தக்கபண்டிதர்களாற்பரிசோதித்து அச்சிட்டு வெளியிடப்பட்டு வரும் தமிழகராதியின் முதலிரண்டுபகுதிகள் முன்னமே வெளிவந்துள்ளன. இப்பொழுது அதன் மூன்றாம்பகுதியாக எஃகம் என்றசொல்முதல் ஔஷதம் என்றசொல் வீறாயுள்ள உயிர்முதல்மொழிகளுக்கு வழக்கப்படி ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கமாகப் பொருளெழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பகுதியோடு உயிர்முதல்மொழிகள் முழுதும் அடங்கிய முதற்றொகுதி முற்றுப்பெற்றுவிட்டது. இந்த முதற்றொகுதியுள், சற்றேறத்தாழ உயிர்முதல்மொழிகள் பதினேழாயிரமுள்ளன. இப்போது வெளிவந்துள்ள இம்மூன்றாம்பகுதியின் விலைமட்டும் ரூபா 2. முன்வெளிவந்திருக்கும் முதலிரண்டு பகுதிகளும்சேர்ந்து 632 பக்கங்களடங்கிய முதற்றொகுயின் விலை ரூபா 10. வேண்டுவோர் சென்னை, வேப்பேரியில் S. P. C. K. புத்தகசாலை அதிகாரிகளிடம் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

வீரபத்தினி:—இது, ஆலங்காடு ஸ்ரீமத். து. சுப்பையாபிள்ளையவர்களாற் சிலப்பதிகாரத்தைத்தழுவிப் படிப்பவர் விருப்புறுமாறு இடையிடையே சிலப்பதிகாரச்செய்யுளடிகளையும் தொடர்புடையவாக மடுத்து, கோவலன்வாழ்க்கை, வழிச்செலவு, மதுரைச்செய்தி, சேரநாட்டில் தெய்வமாதல் என்னும் பகுதிகளையமைத்து நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இதன்முதலிற் புகார்ச்சிறப்பு என்னும் பகுதியில் புகார் நகரைப்பற்றி ஆங்காங்குச் சொல்லிய பலதிறத்தசிறப்புக்களும் ஒருங்கு விளங்கும்படி தொகுத்தெழுதியிருப்பது பாராட்டத்தக்கது. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

அசோகனுடைய சாஸனங்கள்:—இது, கும்பகோணம் கவர்ன்மெண்டுகாலேஜ், சரித்திரஆசிரியர் ஸ்ரீமத். R. ராமையரவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு அவதாரிகை, குறிப்புரை முதலியவற்றுடன் பதிப்பிக்கப்பெற்றது. இதனால் அசோகன்சரிதை, தர்மம், அரசாட்சி, அவன்காலப் பழம்பொருள்கள், எழுத்துக்கள், கல்வெட்டுக்கள், மற்றும் சாஸனங்கள் முதலியன நன்கு புலப்படும். சரித்திரஆராய்ச்சி செய்ய விரும்பும் தமிழர்க்கு இப்புத்தகம் மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா 14. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உ௱௬-ம் பக்கத்தொடர்ச்சி.]

## தைலமாட்டுப்படலம்.

இறந்த தசரதன் உடம்பை பரதசத்துருக்கர் வரும்வரை எண்ணெயிலிட்டு வைத்ததைக் கூறுவது. (தைலம்—எண்ணெய். ஆட்டுதல்-முழுகுவித்தல்.)

### இராமன் வனத்துக்கேகுதல்.

283. ஏவிய குரிசில்பின் யாவர் ஏகிலார்?
மாவியல் தானையும் மன்னை நீங்கலாத்
தேவியர் ஒழிந்தனர்; தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன, உயிர் இலாமையால்.

இ - ள். இராமன் பின் ஏகாதவர் யாவர்? (மூர்ச்சித்துக்கிடந்த தசரத) ராசனைப் பிரியாத (கோசலை முதலிய) தேவியர் (ஏகுதல்) ஒழிந்தனர்; உயிரில்லாததனால் சித்திரங்களும் (ஏகுதல்) ஒழிந்தன.

ஏவிய—(தசரதனால் காட்டுக்கேகும்படி) கட்டளையிடப்பட்ட. குரிசில் (—பெருமையிற் சிறந்தோன்), இராமனைக்குறித்தது. மா இயல்தானை—பெருமைபொருந்திய சேனை (யையுடைய). ஓவியம்—சித்திரம். 'யாரும் ஏகினா'ரென்றும் பாடம்.

அயோத்திநகரமாந்தர் ஒருசிலரொழிய அனைவரும் இராமனைப் பின்றொடர்ந்து காட்டுக் கேகினரென்பதை, அவ்வாறே கூறாமல், இராமன்பின் யாவர் ஏகிலர்? என ஒரு வினா எழுப்பி, அதற்கு விடையாக, சரமதசையிலிருந்த தசரதனைப் பிரியவொண்ணாமையால் தேவியர்களும் உயிரில்லாமையால் ஓவியங்களும் ஏகாதிருந்தமை கூறி, ஏகச் சாத்தியமுடையாராயிருந்தாரெல்லாரும் ஏகினரென்றுகொள்ளக் கூறிய கவிசாதுரியம் கவனிக்கத்தக்கது.

[சூரியன், இராமன் காட்டுக் கேகுவதை யான் காணமாட்டே னென்று ஓடி ஒளிப்பான்போல, அத்தமனகிரியிற் சென்று மறைந் தான். எருமைகளும் பசுக்களும் இல்லினைநோக்கிச் செல்லுவனவாயின. இராமனுக்குற்ற கட்ட தசையைக் கண்டு மாதர்முகங்கள் வாடலுற்றது போல, வனசமலர்கள் மூடலுற்றன. மந்தரையின் வஞ்சவார்த்தையால் இருளடைந்த கைகேயியின் நெஞ்சம்போல, மண்ணும் விண்ணும், இரவுவர, இருளடைந்தன. விண்மீன்களோடு விளங்கலுற்ற வானம், கண்ணுயிரம் பொலியும் இந்திரனது கரியமேனியை ஒத்தது.

இராமன், அயோத்தியினின்று இரண்டு யோசனைதூரம் சென்று இருடிய ராச்சிரமத்திலே இறங்கியிருந்தான். அப்போது அவனிருந்த இடத்தைச் சூழ்ந்து நெடுந்தூரம் சனங்கள் மொய்த்திருந்தன. அவர்க ளெல்லாரும் உறங்கலுற்றபோது, இராமன், சுமந்திரனைநோக்கி "அன்புமிக்க இவர்களை அயோத்திக்குத் திரும்பச்செய்தல் ஆகாதது. அவ்வாறு செய்யாமல் யான் வனத்துக் கேகுவதும் கொடுமையானது. நீ அயோத்திக்குத் தேரைத் திருப்பிச் செலுத்துவாயானல், அது சென்ற தடங் கண்டு யான் அங்கே திரும்பிப்போய்விட்டேனென்று அவர்கள் திரும்புவார்கள். இது யான் உன்பால் வேண்டிக்கொள்வது" என்றான். சுமந்திரன், "என் உயிர் போலும் உன்னை நீங்கிச்சென்று நீவனஞ்சென்றது காரணமாக, அயோத்தியில் நிகழும் துக்கச்செயல் களைக் காண்பேனானல், உனது சிறியதாயினும் தீய விதியினும் தீயேனா வேன்" என்று கூறிப் பின்னும் கூறுகின்றான்.]

284. "தேவியும் இளவலும் தொடரச் செல்வனைப்
பூவியல் கானகம் புகஉய்த் தேனென்கோ?
கோவினை உடன்கொடு குறுகி னேனென்கோ?
யாவது கூறுகேன்? இரும்பின் நெஞ்சினேன்".

இ - ள். "(யான் தசரதனிடத்தில்) சீதாதேவியும் இளையபெருமா ளும் பின்தொடர்ந்து செல்ல, இராமபிரானைக் காட்டுக்குள்ளே போக விட்டுவந்தேனென்று சொல்வேனோ?, அவனை என்னுடன் (கூட்டிக்) கொண்டுவந்தேனென்று கூறுவேனோ? யாது செப்புவேன்? (என்றான் சுமந்திரன்).

இளவல்—தம்பி. செல்வன்—(தசரதனுக்கு) மகன். பூ இயல்-பூக்கள் பொருந்திய. உய்த்தேன்—அனுப்பினேன்; செலுத்தினேன். என்கோ—என்பேனோ. கூறுகேன்—சொல்வேன். இருப்பின் நெஞ்சினேன்—இரும்பு போல (வன்மையுடைய) நெஞ்சுடையேன்.

இராமனை நாட்டுக்கு இட்டுவந்தேனென்னாது, காட்டுக்குள் விட்டு வந்தேனென்று எவ்வாறு கூறுவேனென்பது கருத்து.

[சுமந்திரன், இராமனை நோக்கி "மென்மையான பூவின் பரப்பிலும் மிதிக்கப்பொறாத மெல்லடிகளையுடைய சீதையையும் இராம லக்குமணரையும் வன்மையான பரற்கற்களையுடைய பாரிலே நடந்துசெல்ல விட்டு, நான் தேரிலே அமர்ந்து வந்தேனென்று செப்புவேனோ? அரசன் உயிர் மீளும்படி உன்னை அழைத்துவந்தேனென்னாமல், அவன் உயிர் மாளும்படி உன்னை விடுத்துவந்தேனென்பேனோ?" என்றும் பின்னும் பலவாறாகவும் துன்பு கூர்ந்து சொல்லி, இராமனடியில் விழுந்து, சோக மிகுதி தாங்கமாட்டாமற் புரண்டான். இராமன் அவனை யெடுத்துத் தழுவிக் கண்ணீர் துடைத்துப் பக்கத்தில் இருத்திப் "பூமியிலே பிறந்தோராயுள்ளார்க்கு வரும் நன்மை தீமை யாவையும் முன்னை வினைப் பயனாக முறைதவறாது வருவனவாமென்பதை உணர்ந்த உள்ளத்தினாய்! நமக்கு வரற்பாலதாகிய பழிவந்தால், அது முறையாக வந்ததென்று கருதாமல், நீ துன்பம் உறலாமோ?" என்று பின்னுங் கூறுகின்றான்.]

285. "முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேறறம்
இன்பம் வந் துறுமெனின், இனிய தாய், இடைத்
துன்பம்வந் துறுமெனில், துறக்க லாகுமோ?"

இ - ள். "தருமமானது, (நல்லனவை யாவற்றுக்கும்) முன்பு (முதலாவதாக) நின்று, (தன்னை மேற்கொண்டாரது) புகழை நிலைநிற்கச் செய்து, (அவர்களுடைய) இறுதிக் காலம் (மரணகாலம் வந்து) முடிந்த பின்பு (மறுமையிலும் உதவியாக) நின்று ஆன்மலாபத்தை அளிக்கும். (அந்தத் தருமத்தின் முடிவாக எய்தும் நற்பயன் எய்துதற்குமுன்) இடையிலே இன்பம் வருமானால் (அத்தருமத்தை) இனியதாக (க்கொண்டு) துன்பம் வருமானால் (அதனைத்) தள்ளிவிடலாமோ?" (என்றான் இராமன்).

இசை—கீர்த்தி. நிறுவி (—நிறுத்தி) நிறீஇ என வந்தது. முடிவு—சாவு. உறுதி—ஆன்மலாபம்; நல்லது (சிந்தாமணி). பயக்கும்—கொடுக்கும் பெருமை (யுடைய) அறம் பேரறமெனலாயிற்று. 'துன்பம்' என்பதன் முன்னுள்ள 'இடை'யை 'இன்பம்' என்பதன்முன் கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது. துறக்கல்—விட்டுவிடுதல்.

286. "நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற,
மறப்பயன் விளக்குறும் வன்மை யன்றரோ;
இறப்பினும், திரு எலாம் இழப்ப எய்தினும்,
துறப்பிலர் அறமெனல் சூர ராதலே".

இ-ள். "(ஒருவர்) சூர (ரென்று சொல்லுதற்குரிய)ராதல், (அவர்களை எதிர்த்தோரது) பளபளப்பான பெரிய ஆயுதம் தம் நெஞ்சுக்கு நேராகவந்தபோது (அதற்கு அஞ்சிச் சிறிதும் சலியாத) தைரியத்தைத் தருகின்ற ஆற்றலுடைமையாலன்று; (மற்றெதனாலெனில்,) இறக்கும்படி நேர்ந்தாலும், செல்வமெல்லாம் இழக்குபடி நேர்ந்தாலும் (இவர்) தருமத்தைக் கைவிடாதவரென்று சொல்லப் பெறுதலால் (என்க, என்றான் இராமன்).

முதலாவது நிறம் ஒளியையும் இரண்டாவது நிறம் நெஞ்சையும் குறித்தன. படைக்கலம்—ஆயுதம். மறம்—வீரம். பயன்—பலன். மறப்பயன்—வீரத்தினாலாம் பலன்—தைரியம். அரோ அசை. திரு—செல்வம். துறப்பு—கைவிடல். 'சூராராவதே' யென்றும் பாடம்.

யுத்தவீரரினும் தருமவீரர் சிறந்தவரென்பது விளங்க யுத்தவீரர் உயிரிழத்தற்கஞ்சாரென்றும், தருமவீரர் அதுவேயன்றி எல்லாச்செல்வத்தையும் இழத்தற்கும் அஞ்சாரென்றும் கூறினர். உயிரையேயிழக்க ஒருப்படுவார்க்கு, அவ் வுயிரிருந்தாலன்றிப் பயன்படாத செல்வமனைத்தையும் இழத்தற் கொருப்படல் அரிதோவெனில், அரிதே: எதனாலரிதெனில்,—நெருப்புக்குட்பட்டவர் நித்திரைசெய்தல்கூடுமாயினும், தரித்திரத்துக்குட்பட்டவர் தூங்குதல் சாத்தியமன்றென்ற பொருள் புலப்பட, "நெருப்பினுள் துஞ்சலும் ஆகும், நிரப்பினுள்—யாதொன்றும் கண்பாடரிது" என்று வள்ளுவர் கூறியவாறு என்றும் செல்வத்தை அறியாத வறியாருக்கே கொடுந்துன்பம் விளைக்கும் வறுமையை, ஒருகால் செல்வமுடையாராயிருந்தார் அச் செல்வமனைத்தையும் இழந்த

போது அடைவாராதலால், அவர்கள், ஆருயிர் துறத்தல் அரும்பொருள் துறத்தல் ஆகிய இரண்டிலொன்று செய்தே தீரக்கடவதாகிய யாதாயினு மோர் ஆபத்தை அடைவாரானால், எல்லாச்செல்வத்தையும் இழந்து உயிரோடிருத்தலினும் இறந்துவிடுதலே சிறந்தசெயலென்று கொள்வ தனாலென்க. எத்தனையோ செல்வர்கள் முழுச்செல்வமும் இழக்கநேர்ந்த போது உயிர்துறந்தது பலரறிந்தது. இறத்தலினும் எல்லாச்செல்வத் தையும் ஒருங்கிழத்தல் கொடிதென்றுணர்த்தற்கு முதற்கண் 'இறப்பி னும்' என்று பின்னர்த் "திரு எலாம் இழப்ப எய்தினும்" என்றார். செல்வத்தில் ஒருபகுதியை யிழந்தவர் எஞ்சிய பகுதிகொண்டு இனிது வாழ்தல் இயலுமென்பதை விலக்கத், 'திரு எலாம் இழப்ப எய்தினும்' என்றார். அன்றி, உடம்பு நிலைக்கவும் மானங்காக்க வும் இன்றியமையாத சிற்றளவு (Minimum) உள்ள செல்வமுடையார்க் கும் அஃதில்லார்க்கும் உள்ள வேற்றுமை உயிருள்ள உடலுக்கும் அஃ தில்லாத உடலுக்கும் உள்ள வேற்றுமைபோலப் பிரதானமானது. அச் சிற்றளவுச் செல்வனொருவனுக்கும் மிக்க பெருஞ்செல்வனொருவனுக்கும் (என்பானேன், அகண்ட பூமண்டலாதிபதி - சார்வபௌமன் - ஏகசக் ரேசுவர னென்னும்படி "மல்லல்நெடும் புவியனைத்தும் பொதுநீக்கித் தனிபுரக்கும் மன்ன" னுக்குமே) உள்ள வேற்றுமை அப்பிரதானமே யன்றி முக்கியாமிசத்தில் வேற்றுமையே யன்றென்ற மெய்ம்மை விளங்க வும் "திரு இழப்ப எய்தினும்" என்னாது "திரு எலாம் இழப்ப எய்தி னும்" என்றாரென்க. இவ்வாறாக, இப்பாட்டு மிக ஆழ்ந்த விழுப்பொரு ளுடைமை உள்ளுநன்றி ஓர்ந்து ஊகித்துணர்ந்து உவத்தற்குரியது.

[பின்னும், இராமன் சுமந்திரனை நோக்கி, "யான் உன்சொற்படி நகர்க்குத் திரும்புவேனானால், என்றும் அறம் திறம்பாத எங்கள் இராச வமிசம் என்னால் தருமம் தப்பியதென்ற பழியை அடைவேனாவேன். அறத்தைக்காக்கத் தம் அரும் புதல்வனை ஆரணியத்துக்கு அனுப்பின னென்பது அரசனுக்கு மாண்பாம். அவன் ஆணைப்படி யான் வனம் சேர்தல் எனக்கு மேன்மையாம். நீ முதற்கண் வசிட்டனை அடைந்து, அவனுக்கு என் வந்தனம் வழங்கி, கைகேயி அன்னையால் துன்பம் விளைந்ததென்று யான் சிறிதும் கருதிலேனென்பதையும், என்பால் வைத்த அருளைப் பரதன்பால்வைத்தலாகிய வரத்தை வேண்டினே னென்பதையும் கூறி, அவனுடன் அரசனிடம் சென்று அவன்

துன்பத்தை ஆற்றி, யான் ஈரேழுவருடங்கழித்துத் திரும்பிவந்து திருவடிகளைச் சேவிப்பேனென்று செப்பி வசிட்டன்வார்த்தையால் அவன் மனம் தேறும்படி செய்வாயாக. பின்பு, அன்னையர் மூவர்க்கும் என்னுடைய வணக்கத்தை இயம்புவாய்" என்றான்.

சுமந்திரன், "உன் ஆணைப்படி செய்தலே யான் செய்யத்தக்க செயல்" என்று இராமனுக்குக்கூறிச் சீதையை, அவள் சொல்லக்கருதுவதைத் தெரியக்கருதி, நோக்கினான். அவள் "அரசனுக்கும் அத்தையர்க்கும் என் வணக்கத்தையும் கூறி என் தங்கையர்க்கு என் கிளிப்பிள்ளையைப் பேணும்படி சொல்வாயாக" என்றாள். இதுகேட்ட சுமந்திரன், இராமனுடனிருத்தலால் யாதுந் துன்பமறியாளாய்க் கிளிப்பிள்ளையை மறவாதவள், ஏதேனுந் தீங்குநேர்ந்துவிட்டால், எவ்வாறாற்றுவாளென்று வருந்தினான். இராமன் தடுத்தும் வருந்துதலொழியமாட்டானாய் விம்மினான். பின்பு, உண்மையாக அவ்வருத்தம் நீங்கிலனாயினும், நீங்கினான்போன்று, இராமனை விடைதருகவென்று தொழுது, இலக்குமணனைநோக்கி நீ கூறுவது யாது என்றான். அவன் "எம்பிரானுக்குக் கொடுத்த இராச்சியத்தை மீட்டு வேறொருத்திக்குக் கொடுத்த வேந்தன் மெய்யனோ! அவனை வேந்தனெனலாமோ! தன் தலைமகன் காட்டில் இலை காய் தின்று காலந்தள்ளத், தான், நாட்டில் இராசபோசனம் அருந்தி இனிது வாழ்தல் வல்லமைதானென்று அவனுக்குக் கூறு. இராமனை இராச்சியத்தை இழப்பித்தாரைவென்று அவனை இராசனாகச் செய்திலாமையால் அவனுடன் பிறந்திலேன். அந்த அரசை அபகரித்து ஆளுகின்ற உன்னுடனும் பிறந்திலேன். உன்னைச் சார்ந்த சத்துருக்கனுக்கும் உடன் பிறந்தேனல்லேன். ஆகவே, என்னையன்றி என்னுடன் பிறந்தார் யாரும் இல்லாத யான் சுகமாவிருக்கிறேனென்று பரதனுக்குச் சொல்லு" என்றபோது, இராமன் "தகுதியல்லாதவற்றைச் சாற்றாதே"யென்று தடுக்கத், 'தடையுண்டு தத்தளிக்கும் நெஞ்சினனாய்த், தாழ்ந்து நின்றான். சுமந்திரன் தேரிலேறி, யாருமறியாவண்ணம் தேரைச் செலுத்திக்கொண்டு அயோத்திக்குச் சென்றான்.]

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

# ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1926ம்௵ மார்ச்சுமீ 6உ நடத்திய ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

---

## பீ. ஏ., பரீக்ஷை.

தொடர்ந்தெண். ரிஜிஸ்டர் நெ.

### 2-வது வகுப்பு.

1. 2. C. சங்கரலிங்கம், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.
2. 1. A. S. முத்தையா முதலியார், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.

---

## எப். ஏ. பரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

1. 37. M. இரத்தினசபாபதி, முனிசிபல் காலேஜ், சேலம். (முதற்பரிசு ரூபா 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)
2. 20. K. பக்ஷிராஜன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி. (இரண்டாவதுபரிசு ரூபா 35.)

### 2-வது வகுப்பு.

1. 35. P. V. இரங்கையா, முனிசிபல் காலேஜ், சேலம்.
2. 28. S. இராமகிருஷ்ணன், St. Xavier's College, பாளையங் கோட்டை
3. 34. P. I. சுப்பிரமணியன், முனிசிபல் காலேஜ், சேலம்,
4. 51. N. இராமாநுஜம், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
5. 36. P. வெங்கடரமணன், முனிசிபல் காலேஜ், சேலம்.

6. 32. S. திரவியம்நாடார், ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர் கோவில்.

7. 40. S. சுவ்யம்பிரகாசம், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

8. 38. V. நடராஜன், முனிசிபல் காலேஜ், சேலம்.

9. 55. K. சீதாராமன், ஸ்ரீமீனுக்ஷிகாலேஜ், சிதம்பரம்.

10. 45. R. ராஜாராமன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.

11. 58. A. பூவராஹாச்சாரி, ஸ்ரீமீனுக்ஷிகாலேஜ், சிதம்பரம்.

12. 29. S. இராமலிங்கம், St. Xavier's College, பாளையங்கோட்டை.

13. 12. S. கிருஷ்ணன், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

14. 14. R. A. வையாபுரி, பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.

---

## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

1. 139. V. ரங்கசாமி நாயுடு, முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர் N.T. (முதற்பரிசு ரூபா 30. [வெள்ளிப்பதக்கமும் மீதரூபாவும்.])

2. 274. M. பெரியநாடார், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. (இரண்டாவது பரிசு ரூபா 25.]

3. 308. V. கோவிந்தசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம். (மூன்றாவது பரிசு ரூபா 20.)

4. 119. V. வரதராஜுலு, முனிசிபல் காலேஜ், சேலம். (நான்காவது பரிசு ரூபா 15.)

5. 318. S. சண்முகசுந்தரம், ஸ்ரீபூமீஸ்வர ஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம். (ஐந்தாவது பரிசு ரூபா 12.)

6. 351. M. திருவேங்கடத்தான், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி.

### 2வது வகுப்பு.

1. 122. K. சுப்புவெங்கடசேஷய்யன், லண்டன்மிஷன் ஹைஸ்கூல், சேலம்.

2. 240. D. இரத்தினம், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.

3. 275. கு. ஆறுமுகம், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

4. 324. M. ஸதாசிவன், ஸ்ரீபூமிஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திர புரம்.

5. 126. S. அம்புரோஸ், ஸெண்ட்மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

6. 111. T. N. குப்புசாமி, முனிசிபல் காலேஜ், சேலம்.

7. 112. G. சாம்பமூர்த்தி, முனிசிபல் காலேஜ், சேலம்.

8. 273. ரெங்கசாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

9. 80. R. சுப்பிரமணியன், க்ஷத்திரிய வித்தியாசாலை, விருதுநகர்.

10. 344. N. A. சேஷன், போர்டுஹைஸ்கூல், நாங்குனேரி.

11. 121. S. ஸ்ரீனிவாஸன், முனிசிப்பல் காலேஜ், சேலம்.

12. 123. K. அங்கண்ணன், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம் புத்தூர்.

13. 173. N. கந்தசாமி, ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

14. 79. M. வேலுசுவாமி, க்ஷத்திரிய வித்தியாசாலை, விருதுநகர்.

15. 104. K. A. வரதன். St. Xavier's College, பாளையங்கோட்டை.

16. 169. K. I. R. இராமகிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், உரத்தநாடு, தஞ்சாவூர் ஜில்லா.

17. 264. R. இராமச்சந்திரன், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண் ணாமலை.

18. 103. A. நடராஜன், St. Xavier's College, பாளையங்கோட்டை.

19. 307. V. தியாகராஜன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.

20. 333. K. ஜெயபாலசுப்பிரமணியன், ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

21. 343. N. T. சீதாராமன், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி.

22. 340. K. ஜெகந்நாதன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

23. 100. R. நாராயணன், St. Xavier's College, பாளையங்கோட்டை.

24. 110. V. ஜெயராமன், முனிசிபல் காலேஜ், சேலம்.

25. 115. V. நாகசுப்பிரமணியன், ஷை ஷை

26. 138. D.A. இருதயநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், உதகமண்டலம்.

27. 193. K. M. நாகசங்கரன், ஹைஸ்கூல், முத்தியாலுப்பேட்டை, சென்னை.

28. 325. A. கோவிந்தன், ஸ்ரீபூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திர புரம்.

29. 338. M. S. துரைசாமி, ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

30. 96. A.P. ஸ்ரீநிவாசன் திருவடி, St. Xavier's College, பாளையங் கோட்டை.

31. 120. R. பெருமாள், முனிசிபல் காலேஜ், சேலம்.

32. 323. S. நடராஜன், ஸ்ரீபூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திர புரம்.

33. 108. P. செந்தில்நாயகம், St. Xavier's College, பாளையங் கோட்டை.

34. 140. P. ஷண்முகவேலாயுதம், முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர். N. T.

35. 292. R. இராமசாமி, போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.

36. 319. R. கிருஷ்ணன், ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந் திரபுரம்.

37. 201. A. சிவப்பிரகாசம், திருப்பவுர் கலாசாலை, சென்னை.

38. 245. K. வெங்கு, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

39. 102. D. ரஞ்ஜிசிங், St. Xavier's College, பாளையங்கோட்டை.

40. 311. S. வேங்கிடகிருஷ்ணன், A.A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.

41. 322. R. சுப்பிரமணியன், ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச் சந்திரபுரம்.

42. 342. S. பொன்னம்பலம், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

43. 94. T. P. ராமசுப்பிரமணியன், St. John's College, திருநெல் வேலி.

44. 107. சு. சுவாமிநாதன், St. Xavier's College, பாளையங்கோட்டை.

45. 212. P. S. சபாபதி, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

46. 243. K. R. சேஷன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.

47. 113. V. வரதராஜுலு, முனிசிபல் காலேஜ், சேலம்.

48. 326. K. வெங்கடேசலு, வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல், திருவள் ளூர்.

49. 327. V. புருடோத்தமன், ஷை ஷை.

50. 170. T. S. கணபதி, போர்டு ஹைஸ்கூல், உரத்தநாடு, தஞ்சை ஜில்லா.

51. 195. K. S. வைத்தியநாதன், ஹைஸ்கூல், முத்தியாலுப்பேட்டை, சென்னை.

52. 341. C. மாதவன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

53. 347. S. சங்கரசுப்பு, போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி.

54. 127. K. மாதையன், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

55. 246 (b) M. கோவிந்தசாமி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

56. 196. A. வெங்கிட்டராமன், P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர், சென்னை.

57. 321. R. துரைசாமி, ஸ்ரீபூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம்.

58. 83. R. சோமசுந்தரம், க்ஷத்திரிய வித்தியாசாலை, விருதுநகர்.

59. 134. A. P. சுந்தரம், மஹாராஜனஹைஸ்கூல், ஈரோடு.

60. 171. I. முகுந்தன், ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

61. 246(a). P. ரெங்கசாமி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

62. 93. N. இலக்குமணப்பெருமாள், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

63. 239. W. சோணுராவ், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்,

64. 249. S. V. திருவேங்கிடாச்சாரி, St. Xavier's High School, தூத்துக்குடி.

65. 290. R. S. சுப்பிரமணியன், ஹைஸ்கூல், பத்தமடை.

66. 298. S. பஞ்சாபகேசன், போர்டுஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.

67. 301. K. K. கோவிந்தராஜுலு, போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.

68. 89. M. S. சுப்பையா, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

69. 98. S. வின்செண்ட் பர்னுந்து, St. Xavier's College, பாளையங்கோட்டை.

70. 199. V. லோகநாதன், திருப்பவூர் கலாசாலை, சென்னை.

71. 99. T. M. அசரியாஸ்பூபாலராயன், St. Xavier's College, பாளையங்கோட்டை.

72. 241. C. N. தானப்பன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.

73. 313. P. S. கிருஷ்ணப்பசெட்டி, A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.

74. 159. R. வெங்கட்டராமன், போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.

75. 315. S. முத்துவிநாயகம், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.

76. 334, A. வெங்கட்டராமன், ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
77. 153. N. திருநாவுக்கரசு, ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
78. 244. K. ராஜகோபாலன், விக்டோரிய ஹைஸ்கூல், பாபநாசம்.
79. 253. V. E. பரசுராமப்பிள்ளை, டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை.
80. 90. K. A. தீத்தாரப்பன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
81. 101. க. பொன்னுசாமிபர்ணந்து, St. Xavier's College, பாளையங்கோட்டை.
82. 191. M. வேங்கடேசன், ஹைஸ்கூல், முத்தியாலுப்பேட்டை, சென்னை.
83. 270. K. ஆளவந்தான், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை,
84. 336. A. நகீருத்தீன்சாயபு, ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்
85. 312. P. T. ஸ்ரீநிவாஸாச்சாரி, A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.
86. 77. G. ஏசுதாசன், க்ஷத்திரிய வித்தியாசாலை, விருதுநகர்.
87. 183. D. K. கிருஷ்ணசாமி ஐயங்கார், இஸ்லாமியா காலேஜ், வாணியம்பாடி.
88. 192. M. N. சுவாமிநாதன், ஹைஸ்கூல், முத்தியாலுப்பேட்டை, சென்னை.
89. 278. K. R. வாஞ்சீஸ்வரன், ஹைஸ்கூல், பத்தமடை.
90. 75. R. சுப்பிரமணியன், அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல், பசுமலை.
91. 117. S. ஜமால் மைதீன் ராவுத்தர், முனிசிபல் காலேஜ், சேலம்.
92. 284. K. N. சுப்பையா, ஹைஸ்கூல் பத்தமடை.
93. 296. M. சோமசுந்தரம், போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.
94. 91. S. S. வேலாயுதம், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
95. 207. N. G. வீராசாமி, கலவல இராமாநுஜம் கலாசாலை, புரசபாக்கம், சென்னை.
96. 259. A. குப்புசாமி, டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை.
97. 288. K. A. சுப்பிரமணியன், ஹைஸ்கூல், பத்தமடை.

**B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,**

3—8—26.

அக்கிராசனாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் குரோதனஸூ பங்குனிமீ 23, 24, 25,
(1926-ம்ஸூ ஏப்பிரல்மீ 5, 6, 7,)-ஆம் தேதிகளில்
நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற்றேறிப்
பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும்
மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

## பண்டிதபரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

தொடர்ச்சி நிர். ரிஜிஸ்டர் நிர்.

1. 7. சி. கணபதிப்பிள்ளை, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

2. 6. S. சோமநாதசெட்டி, மல்லப்பனூர், நங்கவள்ளி போஸ்டு, சேலம் ஜில்லா.

## பாலபண்டிதபரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

1. 14. சங்குப்புலவன், பூசாரிக்கவுண்டன்பட்டி, சின்னமனூர் போஸ்டு பெரியகுளம் தாலூகா.

(முதற்பரிசு ரூபா 70 பெறத்தக்கதங்கப்பதக்கம்.)

### 2-வது வகுப்பு.

1. 10. நாராயணசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

## பிரவேசபரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

1. 42. S. சிங்காரவேல், இளங்காடு, திருக்காட்டுப்பள்ளி போஸ்டு, பூதலூர் S.I.R. தஞ்சாவூர் ஜில்லா.

(முதற்பரிசு ரூ 50 பெறத்தக்கதங்கப்பதக்கம்.)

2. 70. C.K. நடேசகவுண்டர், கதவு நிர். 20/27 குறும்பூர் வீதி, கோயம்புத்தூர். (இரண்டாவது பரிசு ரூபா 30.)

## 2-வது வகுப்பு.

1. 81. வே. ஐயாநாயகர், குன்னத்தூர், ஆரணி ஜாகீர். N. A. Dt.
2. 24. ப. ஜீவரத்தினம், மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
3. 30. சொ. கலியாணசுந்தரம் பிள்ளை, செட்டிகள் தெரு, சிவகெங்கை இராமநாதபுரம் ஜில்லா.
4. 46. S. தியாகராஜ ஐயர், உபாத்தியாயர், போர்ட்ஸ்கூல், கீழக் கடம்பூர், காட்டுமன்னார்குடி போஸ்டு, சிதம்பரம்தாலூகா.
5. 54. பூவை. இராஜகோட்டியப்பன் c/o பி. அங்கப்பபிள்ளை, இராஜ பாஸ்கரசேதுபதி பாடசாலை, ஊர்க்காடு, அம்பாசமுத்திரம் போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா.
6. 22. கு. குமாரசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
7. 45. ஸ்ரீநிவாஸவரதாச்சாரி, உபாத்தியாயர், இந்து எலிமெண்டரி ஸ்கூல், அசிக்காடு, வழுவூர் போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா.

B. இராஜராஜேச்வரஸேதுபதி,

3—8—26.

அக்கிராஸநாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

# நந்திக்கலம்பகம்.

## பாயிரம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மும்மைப் புவன முழுதீன்ற முதல்வி யோடும் விடைப்பாக
[1]னம்மை தருக முத்தமென வழைப்ப வாங்கே சிறிதகன்று
தம்பின் முத்தங் கொளநோக்கிச் சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்த்தாளெஞ் சென்னி மிசையிற் புனைவாமே.

### தரவுகோச்சகக்கலிப்பா.

பொருப்பரையன் மடப்பாவை புணர்முலையின் முகடுதைத்த
நெருப்புருவம் வெளியாக நீறணிந்த வரைமார்ப
பருப்புரசை மதயானைப் பல்லவர்கோ னந்திக்குத்
திருப்பெருக வருளுகநின் செழுமலர்ச்சே வடிதொழுவே.

### வஞ்சித்துறை.

[2]கரியின் முனம்வரு, மரியின் மலர்பத,
முருகி நினைபவர், பெருமை பெறுவரே.

### நேரிசைவெண்பா

திருவாணி யைக்குருவைத், [3]தென்முனியைப் போற்றத்
தருவாணி யாண்மையிறை சாரு—முருவாணி
யைங்கரனைச் சங்கரனை யாறுமுகத் தோனுமையைப்
புங்கில்வைப்பார்க் கில்லைப் புரம்.

பாயிர முற்றிற்று.

---

(பிரதிபேதம்) [1] அம்மைதருக. [2] கரியி னிடர்தொலைத்த, வரியின்பெருமையை, [4] தென்றன் முனியைத்.

# நூல்.

## மயங்கிசைக் கோச்சகக்கலிப்பா.

மண்டலமா யம்பரமாய் மாருதமாய் வார்புனலா
யொண்சுடரா யொளியென்னு மோருருவ மூன்றுருவ
[1]மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் றிகழ்வடிவோ
[2]செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேநின் றிருமேனி;

*[அருவரையி னகங்குழைய வனலம்பு தெரிந்தவுணர்
பொருமதில்க ளவை [3]மூன்றும் பொன்றுவித்த புனிதற்கும்
குருமணிசே ரணிமுறுவற் குலக்கங்கை நதிபாயத்
திருமுடியைக் [4]கொடுத்தாற்குஞ் செம்பாகந் திறம்பிற்றே;]

இலகொளிய மூவிலை [5]வே லிறைவாநின் னியற்கயிலைக்
குலகிரியு மருமறையுங் குளிர்விசும்பும் வறிதாக
வலைகதிர்வேற் படைநந்தி யவனி [6]நா ராயணனிவ்
வுலகுடையான் றிருமுடியு முள்ளமுமே யுவந்தனையே.

(இவை தரவு)

செழுமலர் [7]துதைதரு தெரிகணை மதனன
தெழிலுடல் பொடிபட வெரிதரு நுதலினை;

அருவரை யடியெழ முடுகிய வவுணன
தொருபது முடியிற வொருவிர னிறுவினை.

(இவையிரண்டும் அராகம்.)

வீசிகையிற் கொன்றையும் வெள்ளெருக்கும் விராய்த்தொடுத்த
வாசிகையி னூடேவெண் மதிக்கொழுந்தைச் சொருகினையே;

பாய்புலியி னுரியசைத்த பலபுள்ளிப் படவமலா
மாயிரவாய்க் கருங்கச்சை யழலுமிழ வசைத்தனையே;

---

(பி-ம்) [1]மால்வடிவோ. [2]சேல்வடிவோ. [3]கன்றப் பொன்றுவித்த முனிவர்க்கும். [4]கொடுத்தார்க்கும், [5]வே லனல்லானின். [6]நாராயணனுன். [7]துதியிரு,

*இது இடைச்செருகலெனத் தோற்றுகின்றது.

சோர்மதத்த வார்அருவி சோணைநீ ரெனத்துளிப்ப
வேர்மதத்த கரியுரிவை யேகாச மிட்டனையே;

திசைநடுங்கத் தோன்றிற்று நீயுண்ட திறனஞ்ச
முயிர்நடுங்கத் தோன்றிற்று நீயுதைத்த வெங்கூற்றம்.

(இவை நான்கும் தாழிசை)

அனைத்துலகிற் பிறப்பு நீ, யனைத்துலகி னிறப்பு நீ,
யனைத்துலகிற் றுன்பமு நீ, யனைத்துலகி னின்பமு நீ;

வானோர்க்குத் தாதையு நீ, வந்தோர்க்குத் தந்தையு நீ,
யேனோர்க்குத் தலைவனு நீ, யெவ்வுயிர்க்கு மிறைவனு நீ.

(இவை முச்சீ ரோரடி யெட்டம்போதரங்கம்.)

ஊழி நீ, யுலகு நீ, யுருவு நீ, யருவு நீ,
யாழி நீ, யமுத நீ, யறமு நீ, மறமு நீ.

(இவை இருசீரோரடியெட்டம்போதரங்கம்)

எனவாங்கு, (இது தனிச்சொல்)

ஒருபெருங் கடவுணிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை யளவுந் தென்பொதி யளவும்
[1]விடையுடன் மங்கல விசயமு நடப்ப
வொருபெருந் தனிக்குடை நீழ
லரசுவீற் றிருக்க வருளுக வெனவே. (௧)

(இஃது ஆசிரியச்சுரிதகம்)

நேரிசைவெண்பா.

எனதே கலைவளையு மென்னதே மன்னர்
சினவேறு செந்தனிக்கோ னந்தி—யினவேழங்
கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றுடும்
பூமறுகிற் போகாப் பொழுது. (௨)

(பி - ம்) [1]விடமுமிழ் மடங்கல்.

## கட்டளைக்கலித்துறை.

பொழுதுகண் டாயதிர் கின்றது போகநம் பொய்யற்கென் றுந்
தொழுதுகொண் டேனென்று சொல்லுகண் டாய்தொல்லை நூல்வரம்பு
[1]முழுதுகண் டானந்தி மல்லையங் கானன் முதல்வனுக்குப்
பழுதுகண்டா யிதைப் பேரய்ப்பகர் வாய்சிறைப் பைங்குருகே. (௩)

## எணசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குருகுதிர்முன் பனிக்கொதுங்கிக் கூசுங் கங்குற்
குளிர்திவலை தோய்ந்தெழுந்த நறுந்தண் வாடை
யருகுபனி சிதறவர வஞ்சு வாளை
யஞ்சலஞ்ச லென்றுரைத்தா லழிவ துண்டோ
திருகுசினக் கடக்களிற்றுச் செங்கோ னந்தி
தென்னவர்கோன் றன்குறும்பிற் சென்று சூழ்ந்த
சுரிகைவினைப் பகைஞருட னுண்டபாகத்
துயிலுணர்ந்த வல்லாண்மைத் தொண்டை வேந்தே. (௪)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தொண்டை வேந்தன் சோணாடன் றென்னீ ரலங்கன் முந்நீருங்
கொண்ட வேந்தர் கோனந்தி கொற்ற வாயின் முற்றத்தே
விண்ட வேந்தர் தந்நாடும் வீரத் திருவு மெங்கோனைக்
கண்டவேந்தர் கொண்மின்க ளென்னுங் கன்னிக் கடுவாயே. (௫)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

கடுவா யிரட்ட வளைவிம்ம மன்னர்
கழல்சூழ வங்கண் மறுகே
யடுவார் மருப்பி னயிரா வதத்தி
னடுபோர்செய் நந்தி வருமே
கொடுவார் புனைத்து நகுவார் படைக்கண்
மடவா ரிடைக்குண் மனமே
வடுவா யிருக்கு மகளோயி முன்றின்
மணியூச லாடன் மறவே. (௬)

---

(பி-ம்) [1]முழுதுகண் டார்முனைத் தாரார்தந் தோன்றன் முரிகுறும்பிற்
பழுதுகண் டாய்நந்தி மல்லையங் கானற் பணிக்குருகே.

## புயவகுப்பு.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

மறமத கரிதிசை நிறுவின மணிநகை யவர்மன நகுவன
விறலா சர்கண்மன நெகிழ்வன விரைமலர் களிமுலை பொருவன
திறலுடை யனதொடை புகழ்வன திகழொளி யனபுகழ் ததைவன
நறுமல ரணியணி முடியன [1]நயபா நினதிரு புயமதே. (௭)

### கலிவிருத்தம்.

புயங்களிற் பூவைமார் பொங்கு கொங்கைபி
னயங்கொளத் தகுபுகழ் நந்தி கச்சிசூழ்
கயங்களிற் கடிமலர் துழாவிக் காமுகர்
பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே. (௮)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாடை நோக வீசு மால மாரன் வாளி தூவுமா
லாட லோத மார்க்கு மாலெ னாவி காக்க வல்லனோ
வேடு லாவு மாலை சேரி ராசன் மல்லை நந்திதோள்
கூடி னால லர்வ ராது கொங்கு விம்மு கோதையே. (௯)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோதை சோரிற் சோர்கொங்கை விம்மில் விம்மு குறுமுறுவற்
சோதி வெளுக்கில் வெளுமருங்கு றுவளி னீயுந் துவள்கண்டாய்
காது நெடுவேற் படைநந்தி கண்டன் கச்சி வளநாட்டு
மாத ரிவரோ [2]டுறுகின்றாய் வாழி மற்றென் மடநெஞ்சே. (௧௦)

### ஷை வேறு.

நெஞ்சாகுல முற்றின னேமெலிய
நிலவின்கதிர் நீளெரி யாய்விரியத்
துஞ்சாநய னத்தொடு சோருமிவட்
கருளாதொழி கின்றது தொண்டைகொலோ

(பி-ம்) [1]நயபா னுடையிரு புயமுமே என்றிருக்கலாம். [2]உறுகின்ற வாழி.

செஞ்சாலி வயற்படர் காவிரிசூழ்
திருநாடுடை நந்தி சினக்கலியின்
வெஞ்சாயன் மறைத்த தனிக்குடையான்
விடைமண்பொறி யோலை விடேல்விடுகே. (கக)

கட்டளைக்கலித்துறை.

விடுதிர்கொல் லோவள நாடுடை வீர சற்குமுன்னின்
றிடுதிர்கொல் லோபண் டிறுக்குந் திறைபெரி கானத்தும்மை
யடுதிர்கொல் லோதிற னந்தியெங் கோனயி ராவதத்திற்
படுதிர்கொல் லோபடை மன்னீரென் னுழுங்கள் பாவனையே. (கஉ)

வஞ்சிவிருத்தம்.

வனைவார்குழல் வேணியும் வாடைகணீர்
நனைவார்துகி லும்மிவை நாளுமிரா
வினைவார்கழ னந்திவி டேல்விடுகின்
கனைவார்முர சொத்தது காரதிர்வே. (கங)

தரவுகோச்சகக்கலிப்பா.

அதிர்குரல மணிநெடுந்தே ரவனிநா ரணன்களிற்றின்
கதிரொளிய வெண்மருப்புக் கனவயிரஞ் செறிந்ததான்
மதுரைகொலோ வடபுலிக்கோ னகரிகொலோ மாளிகைசாய்ந்
தெதிரெதிரே கெடநின்ற தெவ்வூர்கொ லறியோமால் (கச,

நேரிசைவெண்பா.

ஓம மறைவாண ரொண்பொற் கழல்வேந்தர்
தாம முடிக்கணிந்த தாளிப்புற்—கோமறுகிற்
பாவடிக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோ னந்திதன்
சேவடிக்கீழ்க் கிணலாஞ் சென்று. (கரு)

கட்டளைக்கலித்துறை.

சென்றஞ்சி மேற்செங்கண் வேழஞ் சிவப்பச் சிலர்திகைப்ப
வன்றுஞ் [1]சினத்தா ரினமறுத் தார்போலு மஃதஃதே

(பி-ம்) [1]சினத்தா ரவர்மறுத்.

குன்றஞ்செய் தோணந்தி நாட்டங் குறிகுருக் கோட்டையின்மேற்
சென்றஞ்சப் பட்டதெல் லாம்படு மாற்றலர் திண்பதியே. (௧௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு காவிரி வளநாடா
நிதிதரு கவிகைபு நிலமக ளுரிமைபு மிவையிவை யுடைநந்தி
மதியிலி யரசர்நின் மலரடி பணிகிலர் வானக மாள்வாரே. (௧௭)

கலிவிருத்தம்.

ஆட்குலாங் கடற்படை யவனி நாரணன்
றோட்குலா மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாட்குலாங் கண்ணினால் விளைத்த மம்மர்நோய்
மீட்கலா மடல்கையில் விரவு மாகிலே. (௧௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரவாத மன்னரெலாம் விண்ணேற வெள்ளாற்று
வெகுண்டோன் றொண்டைக்
கிரவாத பரிசெல்லா மிரந்தேற்கும் பாவைமீ
ரெல்லீர் வாடை
வரவாதை யுற்றிருந்து வருந்துவார் பலரென்றும்
வாழி வாழி
பரவாதை நந்திசெங்கோ லிதுவாகி லதுபார்க்கும்
பரிசு நன்றே. (௧௯)

ஷை வேறு.

நன்றுங்கொடி தாயவிர் கின்றதிரா
நலிகின்றது மாருத சாலமெனத்
தென்றின்னில வென்னு மிளம்பிறையு
மெரியேசொரி கின்றது யாதுசெய்கே
னன்றிங்கில மேழு மளந்தபிரா
னடலுக்கரு கோப னடங்கலர்போ
லின்றென்னுயி ரன்னவள் கொங்கையைவிட்
டெங்ஙன்றுயில் கின்றன னேழையனே, (௨௦)

## வஞ்சித்துறை.

ஏழை மார்துணை, வாழி நந்திதண்
ணீழல் வெண்குடை, யூழி நிற்கவே. (உக)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிற்க மன்னவர் நிரைந்த வெண்குடை
மிடைந்த நீள்கடை நெருந்தகை
விற்கொ ணன்னுதன் மடந்தை மார்மிக
முயங்கு தோளவனி நாரணன்
நற்கொள் வார்மதிற் கச்சி நந்தி
நலங்கொ ளன்னவ னலங்கன்மே
லொற்க மென்மக ளுரைசெய் தோவுல
களிப்ப னித்திற னுரைத்திடே. (உஉ)

## இணைக்குறளாசிரியப்பா.

உரைவரம் பிகந்த வுயர்புகழ்ப் பல்லவ
னரசர் கோமா னடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவே லுயர்வு பாடினன் கொல்லோ
நெருநற் றுணியரைச் சுற்றிப்
பாடு திறப்பத் தன்னூற் புல்கடை
திரிந்த பாண னறுந்தார் பெற்றுக்
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கல னணிந்து
விளங்கொளி யானன னிப்போ
திளங்களி யானை யெருத்தமிசை யன்னே. (உங)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

அன்ன மடமயிலை யாளி மதயானை நந்தி வறியோர்
சொன்ன பொருணல்கு வள்ள லுருகீர தொண்டை வளநாட்
டன்ன நடையாளை யல்குல் பெரியாளை யங்கை யகல்வான்
மின்னை மெலிவாளை நூலி னிடையாளை சேர்வு மயிலே. (உச)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மயில்கண்டான் மயிலுக்கே வருந்தி யாங்கே
மான்கண்டான் மானுக்கே வாடி மாதர்
குயில்கண்டாற் குயிலுக்கே குழைதி யாகிற்
கொடுஞ்சுரம்போக் கொழிநெஞ்சே கூடா மன்ன
ரெயில்கொண்டான் மல்லையங்கோ னந்தி வேந்த
னிகல்கொண்டா ரிருங்கடம்பூர் விசும்புக் கேற்றி
யயில்கொண்டான் காவிரிநாட் டன்னப் பேடை
யதிசயிக்கு நடையாரை யகல லூற்றேன். (உரு)

### கலிவிருத்தம்.

நூற்க டற்புல வன்னுரை வெண்டிரை
நாற்க டற்கொரு நாயக னந்திதன்
கோற்க டைப்புரு வந்துடிக் குந்துணை
வேற்க டற்படை வேந்தர்தம் வீரமே. (உசு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வீர தீரனல் விறலவிர் கஞ்சுகன் வெறியலூர்ச் செருவென்றே
னூர்வ மாவுள நின்றவ ரன்பன்மற் றவன்பெருங் கடைநின்ற
சேர சோழருந் தென்னரும் வடபுலத் தாசருந் திறைதந்த
வீர மாமத கரியிவை பரியிவை யிரவலர் கவர்வாரே. (உஎ)

### ஷை வேறு.

கவரிச் செந்நெற் காடணி சோலைக் காவிரி வளநாடன்
குமரிக் கொண்கன் கங்கை மணாளன் குரைகழல் விறனந்தி
யமரிற் றெள்ளாற் றஞ்சிய வெஞ்சத் தரசர்க டாள்போலு
மிவரிக் கானத் தேகிய வாறென் னெழினகை யிவளோடே. (உஅ)

### ஊசல்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓடரிக்கண் மடநல்லீ ராடாமோ வூச
லுத்தரிகப் பட்டாட வாடாமோ வூச
லாடகப்பூண் மின்னாட வாடாமோ வூச
லம்மென்மலர்க் குழல்சரிய வாடாமோ வூசல்

கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்
காடவற்கு முன்றோன்றல் கைவேலைப் பாடிக்
[1]காஞ்சிபுர மும்பாடி யாடாமோ வூசல். (உகூ)

## கலிவிருத்தம்.

ஊசன் மறந்தாலு மொண்கழ லம்மானை
வீசன் மறந்தாலு மெல்லிய லென்பேதை
பூச லிலங்கிலைவேற் பொற்கழ னந்திநின
பாசிலை யந்தொண்டை யல்லது பாடாளே. (௩௦)

## நேரிசைவெண்பா.

பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்
பீடியன் மாகளிற்றார் பிச்சத்தார்—கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார் கலந்து. (௩௧)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலங்கொ ளலங்கல் வேனந்தி கச்சி நாட்டோ னவன்கழல்
புலங்கொ ளொளிய நல்லோர்க்கும் புகல்கின் றோர்க்கும் பொன்னூர
நலங்கொண் முறுவன் முகஞ்சாய்த்து நாணு நின்று மெல்லவே
விலங்கல் வைத்த பின்னோக்கின் மேலு முண்டோ வினையேற்கே!

## கட்டளைக்கலித்துறை.

வினையின் சிலம்பன் பரிவு மிவடன் மெலிவுமென்பூந்
தினையும் விளைந்தது வாழிதன் மீறுதெள் ளாற்றுநள்ளார்
முனையுமன் றேக முனிந்தபி ரான்மு னை யிற்பெருந்தேன்
வனையும் வடவேங் கடத்தார்தண் சாரலின் வார்புனமே. (௩௩)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புனத்து நின்ற வேங்கைமேற் புகைந்தெ ழுந்த வானையின்
சினத்தை யன்றொ ழித்தகைச் சிலைக்கை வீரர் தீரமோ
மனத்து ணின்ற வெஞ்சினம் மலைத்தல் கண்ட திர்ந்தமான்
வனத்த கன்ற திர்ந்ததோ நந்தி மல்லை யார்ப்பதே. (௩௪)

---

(பி - ம்) [1]காஞ்சி புரம்பாடி.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்க்கின்ற கடலோத மார்க்கு மாறு
மசைகின்ற விளந்தென்ற லசையு மாறுங்
கூர்க்கின்ற விளமதியங் கூர்க்கு மாறுங்
காணலாங் குருக்கோட்டைக் குறுகா மன்னர்
போர்க்கின்ற புகர்முகத்துக் குளித்த வாளி
பூதலத்தில் வடிம்பலம்பப் பூண்ட வில்லோன்
பார்க்கொன்று செந்தனிக்கோற் பைந்தார் நந்தி
பல்லவர்கோன் றன்னருள்யாம் படைத்த ஞான்றே. (௩௫)

### கலிவிருத்தம்.

ஞான்ற வெள்ளருவி யிருவி யெங்கள்பொற்
றேன்றல் வந்திடிற் சொல்லுமி னெண்சுடர்
போன்ற மன்னவ னந்திதன் பூதரத்
தீன்ற வேங்கை யிருங்கணிச் சூழ்ச்சியே. (௩௬)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சூழி வன்மத யானையின் பிடர்படு சுவடிவை சுவட்டின்கீழ்
வாழி யிந்நில மன்னர்வந் தனுதின மிறைஞ்சிய வடுக்கண்டோ
மாழி மன்னவ வன்னைய ராய்ச்சிய ரடுங்கயிற் றடியிட்ட
பாழி மன்னெடுந் தோள்வடுக் கண்டிலம் பல்லவ பகர்வாயே. (௩௭)

### ஷை வேறு.

பகரங்கொ ணெடுந்திவலை பனிவிசும்பிற் பறித்தெறியப்
பண்டு முந்நீர்
மகரங்கொ ணெடுங்கூல வரைதிரித்த மாலென்பர்
மன்னர் யானை
சிகரங்கள் போன்மடியத் தெள்ளாற்றுக் கண்சிவந்தான்
றென்னன் றெண்டி
நகரங்கைப் படுத்தபிரா னந்திநா பதிபணிகோ
னங்கள் கோவே. (௩௮)

ஷை வேறு.

நங்கள்கோத் தொண்டை வேந்த னுமவேன் மன்னர்க் கெல்லாந்
தங்கள்கோ னங்க நாடன் சந்திர குலப்ர காசன்
திங்கள்போற் குடையி னீழற் செய்பகோல் செலுத்து மென்ப
ரெங்கள்கோல் வளைக ணில்லா விபரித மிருந்த வாறே. (௩௯)

கட்டளைக்கலித்துறை.

ஆறு விறலடு போர்வன்மை யாலம ராடியப்பாற்
பாறூர் களிற்றுயர் பல்லவர் கோனந்தி மல்லையன்றிக்
கூறு ளிவளிளங் கொங்கை யவன்வளர் தொண்டையல்லா
னூறு திவடிரு மேனியு நாமெய்க்கொ ணுணுவதே. (௪0)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாணு தித்திரு மடவார் முன்புநி னன்பொற் கழலிணை தொழுதாரிற்
பூணு கத்தொளிர் பொலனு கச்செய்த புதுமென் றுண்டைய தருளாயே
வாணு ளைச்சுளி களியா னைப்படை வயவே லடையலர் குலகாலா
கோனுமைக்கொரு குறையுண்டோவுரைகொங்கா நின்னதுசெங்கோலே. ()

ஷை வேறு.

செங்கோல் வளைக்கை யிவளுந் துவண்டு
செறிமாமை வாட வெழிலா
ரங்கோல் வளைக்கை யிளையா ரிழப்ப
வரசாள்வ தென்ன வகையோ
தங்கோல் வளைத்த திகழ்சேரர் சோழர்
தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
வெங்கோ னிமிர்த்த வரையுஞ் சிவந்த
விற்னந்தி மேன்மொ ழிவையே. (௪௨)

கலிநிலைத்துறை

மொழியார் தொண்டைப் பன்மலர் முற்றுந் தெருவந்து
விழியா ளென்றும் மேனி வெளுத்துற மெலிவாளே
யொழியா வண்கைத் தண்ணரு ணந்தித னூர்மட்டோ
வழியாந் தமரக் கடல்வட் டத்தொரு வண்கோவே. (௪௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒருகோமக னந்தி யுறந்தையர்கோ
னுயர்நீள்வல யத்துயர் வானெவனி
குருகோடு வயற்படர் காவிரியிற்
குலவும்புயல் கண்டு புகார்மணலிற்
பெருகோடு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது போணி நீண்முடிமேற்
றருகோதை நினைந்தயர் வேன்மெலியத்
தழல்வீசுவ தோகுளிர் மாமதியே. (சச)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மதிய மெரிசொரியு மாலையம் மாலை
மறந்தும் புலாது கங்குலெலாங் கங்குற்
கதிர்செ யணிவண்டு காந்தாரம் பாடக்
களிவண்டு புகுந்துலவுங் காலமாங் காலம்
பதியின் வளர்ந்தநறுந் தொண்டையங்கோ னந்தி
பல்லவற்கு நோத பாவையர்தம் பாவை
விதியின் விளைவுகண் டியாமிருப்ப தல்லால்
வினைமற்று முண்டோநம் மெல்லோதி மாட்டே. (சரு)

தரவுகோச்சகக்கலிப்பா.

மாட்டாதே யித்தனைநாண் மானந்தி வான்வரைத்தோள்
பாட்டாதே மல்லையர்கோன் பரியானைப் பருச்சுவடு
காட்டாதே கைதைப் பொழிலுலவுங் காவிரிநீ
ராட்டாதே வைத்தென்னை யாயிரமுஞ் செய்தீரே. (சசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செய்ய வாய்மிகக் கரியகண் வனமுலை
செறிந்திறு மருங்குற்கொம்
பைய சாலவு மவிரிழை யல்குல
மதுமலர்க் குழலென்றால்

வெய்ய வெப்பவி யாதகுஞ் சரநந்தி
வீரவ னிவனைப்போய்
நைய நர்மிவ னகரிகை தொழுதில
நம்முயி ரளவன்றே. (௪௭)

## கட்டளைக்கலித்துறை.

அளவுகண் டாற்குடங் கைத்துணை போலு மரசர்புகும்
வளவுகண் டானந்தி மானே தயன்வையந் தன்னின்மகிழ்
தளவுகண் டாலன்ன வெண்ணகை யாற்றமி யேனதுள்ளங்
களவுகண் டார்முகத் துக்கண்க ளாய கயற்குலமே. (௪௮)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குலமரபு மொவ்வாது பயின்று வந்த
குடித்தொழிலுங் கொள்படையின் குறையுங் கொற்றச்
சிலவளவுஞ் சிந்தியாத் தெவ்வர் தேயத்
தெள்ளாற்றிற் செருவென்ற செங்கோ னந்தி
புலவரசைப் புறங்கண்ட புகழ்சேர் கோவே
பூவலயந் தனிற்கரியாய் நின்ற மன்னா
சொலவரிய திருநாம முனக்கே யல்லாற்
சொல்லொருவர்க் கிசையுமோ தொண்டைக் கோவே. (௪௯)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோவே மாலை மாலையர்க்கோ கோவே வேண்டு நிலவோகண்
கோவே மாலை மாலையது கொண்டார் குறுகு மாறறியேன்
கோவே மாலை நீண்முடியார் கொற்ற நந்தி கச்சியுளார்
கோவே மாலை யுள்ளுமெங்கள் கோவே கம்ப ராளுரே. (௫0)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆகிடுக மாமை யணிகெடுக மேனி யலரிடுக வாரு மயலோர்
போகிடுக சங்கு புறகிடுக சேரி பொருபுணரி சங்கு வளைமென்
ளுகிடறு கானல் வளமயிலை யாதி நயபாளு மெங்க ளளவே
யேகொடியனு கவிவைபியையும்வஞ்சியினியுலகில்வாழ்வது ளதோ. ()

நேரிசைவெண்பா.

உளமே கொடிமருங் குண்டில்லை யென்னி
விளமுலைக ளெவ்வா றிருக்குங்—கிளரொளிய
தெண்ணிலைவேற் கண்ணினு டெள்ளாற்றில் வென்றகோன்
முன்மயிலை யன்னா டனக்கு. (ருஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தனக்குரிய வன்கொங்கை தான்பயந்த மழகளிற்றுக்
காக்கித் தன்பா
லெனக்குரிய வரைமார்ப மெங்கையர்க்கே யாக்கினு
னிகல்வேன் மன்னர்
சினக்கரியும் பாய்மாவுந் தெள்ளாற்றிற் சிந்துவித்த
செங்கோ னந்தி
மனக்கினியா னவனிட்ட வழக்கன்றே வழக்கிந்த
வையத் தார்க்கே. (ருங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தார்வட் டக்கிளி மருவுஞ் சொற்பகர்
தளரிடை தையல் வஞ்சிக்கின்
றேர்வட் டத்தனி மதிவெள் ளிக்குடை
கொடிதென் றுலது பழுதன்றே
போர்வட் டச்சிலை யுடைவாள் பற்றிய
பொருகடன் மல்லைப் புரவலனே
பூர்வட் டத்தனி மதயா னைப்படை
யுடையாய் பல்லவ ரடலேறே. (ருச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

அடலேறு வலத்துயர் வைத்தபிரா
னடலுக்கம கோப னடங்கலர்தா
மடலேறிட வாகை புனைந்தபிரான்
வடவேங்கட நாடுடை மன்னர்பிரான்

பெடையேறு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது போரு ணீண்முடிமேன்
மிடலேறிய கோதை நினைந்தயர்வாண்
மெலியத்தழல் வீசுமி மாமதியே. (௫௫)

## காலம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மலர்ச்சூழ லமர்ந்தினிய வண்டார்க்குங் காலம்
வரிக்குயில்கண் மாவிளிளந் தளிர்கோதுங் காலம்
சிலர்க்கெல்லாஞ் செழுங்தென்ற லமுதளிக்குங் காலந்
தீவினையேற் கத்தென்ற றீவீசுங் காலம்
பலர்க்கெல்லாங் கோனந்தி பன்மாடக் கச்சிப்
பணிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடுங் கால
மலர்க்கெல்லா மைங்கணைவே ளலர்தூற்றுங் கால
மகன்றுபோ னவர்நம்மை யயர்த்துவிட்ட காலம். (௫௬)

### கலிவிருத்தம்.

காலவினை வாணர்பயில் காவிரிந ணாடா
ஞாலமொரு கோவினின டாவுபுகழ் நந்தி
நீலமயில் கோதையிவ ணின்னருள்பெ றாளேற்
கோலவளை கோடலிது மன்னர்புக ழன்றே. (௫௭)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரவல னந்தி யெங்கள் பொன்னிநன் னாட்டு மன்னன்
வரமயில் போற்று சாயல் வாணுதற் சேடி காணுங்
குரவலர் பொழிலிற் கோலக் கோட்டிடை யில்லை யாகி
விரவலர் மலர்க ளெங்கு மில்லையோ நல்கு வேனே. (௫அ)

### டிை வேறு.

நல்கு நந்தியிந் நானிலக் காவலன்
மாரவே ணனிர்முத்த
மல்கு வெண்குடைப் பல்லவர் கோளரி
மல்லலந் திண்டோண்மேன்

மெல்கு தொண்டையுந் தந்தருள் கிலன்விடை
மணியொடும் விடியாத
வல்லி னேடும்வெண் டிங்களி னெடுமுள
னுய்வகை யறியேனே. (௫௬)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அறம்பெருகுந் தனிச்செங்கோன் மாயன் றொண்டை
யங்கனிபோற் சிவந்து திரு முகத்துப் பூத்து
மறிந்துளதே பவளவாய் மருங்கி லாடும்
வல்லியிடை மணிமுறுவன் முத்துச் சால
நெறிந்துளதே கருங்குழலங் குவளை கண்க
ணெடியவேய் தொடியதோ ணேர்ந்து வெம்மை
செறிந்துளவே முலைசிலையே புருவ மாகி
யவர்நம்மைச் சிந்தைநோய் திருத்தி னாரே. (௬0)

இணைக்குறளாசிரியப்பா.

திருவின் செம்மையு நிலமக ளுரிமையும்
பொதுவின்றி யாண்ட பொலம்பூட் பல்லவ
தோடிணை யாக மாவெள் ளாற்று
மேவலர்க் கடந்த வண்ணா னந்திநின்
றிருவரு நெடுங்கண் சிவக்கு மாகிற்
செருநர் சேரும் பதிசிவக் கும்மே
நிறங்கிளர் புருவந் துடிக்கி னிங்கழ
லிறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக் கும்மே
மையில் வாளுறை கழிக்கு மாகி
னடங்கார் பெண்டிர்
பூண்முலை முத்தப் பூண்கழிக் கும்மே
கடுவாய் போல்வளை யதிர நின்னொடு
மருவா மன்னர் மனந்துடிக் கும்மே
மாமத யானை பண்ணி
னுதிர மன்னுறின் னெதிர்மலைந் தோர்க்கே. (௬௧)

## நேரிசைவெண்பா.

ஓராதே யென்மகளைச் சொன்னீரே தொண்டைமேற்
பேராசை வைக்கும் பிராயமோ—நேராதா
ராள்வலியாற் கொண்ட வகன்ஞால மத்தனையுந்
தோள்வலியாற் கொண்ட துயக்கு. (௩௨)

## கட்டளைக்கலித்துறை.

துயக்குவித் தான்றுயில் வாங்குவித் தான்றுயில் வித்திவளை
வயக்குவித்தா னுள்ளம் வஞ்சனை யான்மலர்க் காவகத்து
முயக்குவித்தான் றுகில் வாங்குவித் தான்முன நின்றிவளை
மயக்குவித் தானந்தி மாறோ தயனென்று வட்டிப்பனே. (௩௩)

## சம்பிரதம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வட்டன்றே நீரிதனை மிகவுங் காண்மின்
மற்றைக்கை கொட்டினேன் மாவின் வித்தொன்
றிட்டன்றே பழம்பழுப்பித் துண்ணக் காண்மி
னிவையல்ல சம்பிரத மிகவிற் றெள்ளாற்
றட்டன்றே பொன்றுவகை முனிந்த நந்தி
யவனிநா ராயணன்பா ராளுங்கோமான்
குட்டன்றே மழைநீரைக் குடங்கை கொண்டு
குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின் றேனே. (௩௪)

## கட்டளைக்கலித்துறை.

குடக்குடை வேந்தன்றென் னாடுடை மன்னன் குணக்கினொடு
வடக்குடை யானந்தி மாறோ தயனிந்த வையமெல்லாம்
படக்குடை யேந்திய பல்லவன் றன்னொடும் பாரறியத்
தொடக்குடை யானயல் லாற்சூடு மோவிச் சுடர்ப்பிறையே. (௩௫)

## கலிவிருத்தம்.

பிறைதவழ் செஞ்சடைப் பிறங்க லாண
னறைகழன் முடித்தவ னவனி நாரண

னறைகெழு தொண்டையோன் றெண்டை கண்டபி
னிறைகெழு சங்குயி ரிவளுக் கீந்ததே. (௬௬)

ஷை வேறு.

ஈகின்றது புனமுந்தினை யாமும்பதி புகுநா
ளாகின்றது பருவம்மினி யாகும்வகை யறியேன்
வாழ்கின்றதொர் புகழ்நந்திதன் வடவேங்கட மலைவாய்த்
தேய்கின்றதொ ருருவத்தொடு திரிவாரது திறமே. (௬௭)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

திறைவிடுமி னன்றி மதில்விடுமி னுங்கள்
செருவொழிய வெங்கண் முரச
மறைவிடுமி னிந்த வவனிதனி லெங்கு
மவனுடைய தொண்டை யரசே
நிறைவிடுமி னந்தி கழல்புகுமி னுங்க
ணெடுமுடிகள் வந்து நிகழத்
துறைவிடுமி னன்றி யுறைபதிய கன்று
தொழுமினல தய்ந்த லரிதே. (௬௮)

கலிவிருத்தம்.

அரிபயி னெடுநாட்டத் தஞ்சன முழுதூட்டிப்
புரிகுழன் மடமானைப் போதர விட்டாரா
னரபதி யெனுநந்தி நக்[1]மபி லாபுரியி
லுருவுடை யிவடாயர்க் குலகொடு பகையுண்டோ. (௬௯)

மதங்கியார்.

தரவுகொச்சகக்கலிப்பா.

பகையின்றிப் பார்காக்கும் பல்லவர்கோன் செங்கோலி
னகையும்வாண் மையும்பாடி நன்றாடு மதங்கிக்குத்
தகையுறுண் ணிடைபதிரத் தனபார மவற்றூடு
மிகையொடுங்கா முன்னிக்கூத் தினைவிலக்க வேண்டாவோ. (௭0)

---

(பி-ம்) [1]மயிலாப்பூரில்.

## கலிநிலைத்துறை.

வேண்டா ரெண்ணும் வேந்தர் பிராற்கே மெய்யன்பு
பூண்டா ணங்கா யன்றிவ ளென்றூற் பொல்லாதோ
மூண்டார் தெள்ளாற் றுள்ளே மூழ்க முனிவாறி
மீண்டா னந்திக் கென்மக டோற்கும் வெண்சங்கே. (௭௧)

## வெண்டுறை.

வெண்சங் குறங்கும் வியன்மாதர் முற்றத்து விடியவேவான்
வண்சங் கொலிப்ப மடவார்கள் விளையாடு மல்லைவேந்தன்
றண்செங்கோ னந்தி தனிக்குடைக்கீழ் வாழாரிற்
கண்சிம் புளியானோ யாமோ கடவோமே (௭௨)

## கலிவிருத்தம்.

கடற்கூதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாரை
மடற்கூறு தோறு மலிமல்லை கங்கு
லடற்கூடு சாவே யமையாத வர்வை
திடற்கூறு வேனுக் கேதாவி யுண்டோ. (௭௩)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உண்டிரையிற் செங்கழுநீ ரிலஞ்சி மாடே
யொண்பொழிலிற் சண்பகத்தார் தடவி யோடித்
தண்டலையிற் பூங்கமுகம் பாளை தாவித்
தமிழ்த்தென்றல் புகுந்துலவுந் தண்சோ ணாடா
விண்டொடுதிண் கிரியளவும் வீரஞ் செல்லும்
விடேல்விடுகு நீகடவும் வீதி தோறுந்
திண்டறுகண் மாத்தொழுத பாவை மார்க்குச்
செங்கோல னல்லையோ நீசெப் பட்டே. (௭௪)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பட்ட வேந்தர்தம் பூணொடும் பாவைமார் நாணொடுந் தெள்ளாற்றில்
வட்ட வெஞ்சிலை நாணிடக் கழித்தவன் மல்லையின் மயிலன்னாள்
விட்ட கூந்தலும் விழியுநன் முறுவலு நுதன்மிசை யிடுகோல
மிட்ட பொட்டினொ டிளமுலைப் போகமு மெழுதவு மாகாதே. (௭௫)

வேறு.

ஆகாதுபோக மயில்விளைத் தகன்ற லவன்கை
போகாத சங்கு மருளாள ரென்ற போதுவண்டோ
.... .... .... ....
.... .... .... .... (எசு)

மறம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்பொன்று வில்லொடித ஞணறுத ஞன்கிழவ னசைந்தே னென்றே
வம்பொன்று குழலாளை மணம்பேசி வரவிடுத்தார் மன்னர் தூதா
செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றி னந்திபதஞ் சேரா ரானைக்
கொம்பன்றே நங்குடிலிற் குறுங்காலு நெடுவளையுங் குனிந்து பாரே. ()

ஷை வேறு.

பாவையர் பரிந்து தாங்கும் பனிமலர் செறிந்த செந்திற்
கோவையேய் நந்தி காக்குங் குளிர்பொழிற் கச்சி யன்னாள்
பூவையும் பந்துந் தந்து புல்லினு ளென்னை யென்னே
மாவியல் கானம் போந்த தறிகிலேன் மதியி லேனே. (எஅ)

ஷை

*நீண்டதாங் கங்கு லெங்கு நிறைந்ததாம் வாடை பொங்கி
மூண்டதா மதியி னேடே முயங்குதார் வழங்கு தெள்ளாற்
றீண்டினார் பரியுந் தேரு மிருகைவென் றொருகை வேழந்
தூண்டினு னந்தி யிந்தத் தொண்டைநா டுடைய கோவே. (எகூ)

வெண்டுறை.

கோலக்கொடியன்னவர்நீள்செறுவிற்குறுதேன்வழிகொண்டலருங்குவளை
காலைப்பொழுதின்னெழுகன்னியர்தங்கண்ணின்படிகாட்டிடுகச்சியின்வாய்
மாலத்தெள் ளாறெறிந்த மானே தயன்குடைக்கீழ்
ஞாலத்தோ டொத்ததே நான்பெற்ற நறுங்கொம்பே. (அ0)

*மேற்பாட்டிற்கும் இதற்கும் அந்தாதித்தொடை இல்லை.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொம்புயர் வாமை நாக மெதிர்வந்த நந்தி குலவீர ராக மழியத்
தம்பிய ரெண்ண மெல்லாம் பழுதாக வென்ற தலைமான வீர துவசன்
செம்பியர் தென்னர் சேர ரெதிர்வந்து மாய செருவென்ற பாரி முடிமேல்
வம்புயர்தொண்டைகாணுமடமாதர் தங்கைவளைகொண்டதென்னவலமே.

### குறள்வெண்செந்துறை.

வலம்வரு திகிரியு மிடம்வரு பணிலமு மழைதவழ் கொடிபோலக்
குலமயில் பாவையு மெறிகடல் வடிவமு மிவையிவை கொண்டாயே. ()

### கலிவிருத்தம்.

கொண்ட லூரும்பொழில் வண்டின மாமணி
வண்ட லிடுங்கடன் மல்லைகா வலனே
பண்டை மராமர மெய்தபல் லவனே
தொண்டை யொற்றுவ ளிவடோள் வளையே. (அ௩)

### நேரிசைவெண்பா.

தோள்ரன் மெலியாமே யாழ்கடலாற் சோராமே
வாளா பெறலாமே வாயற்றீர்—கேளாதார்
குஞ்சரங்கள் சாயக் குருக்கோட்டை யத்தனையு
மஞ்சரங்க ளார்த்தா னருள். (அ௪)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருளான தெங்கையர்க்கே யன்றையென் றியம்பிடுமெங்
கன்னி செஞ்சொற்
றெருளாமே னல்குநந்தி தெள்ளாற்றிற் பொருதபோர்
தன்னி லங்கா
ளிருளான மதகரியும் பாய்மாவு மிரதமுங்கொண்
டெதிர்ந்தார் தம்முன்
மருளாமே நன்கடம்பூர் வானேற வளைந்துவென்ற
மன்ன ரேறே. (அ௫)

ஷ டி வேறு.

ஏறு பாய விளைவித்த தெல்லாம் வார்க்குங் குமக்கொங்கை
வீறு பாயக் கொடுக்கின்ற விடலை யார்கோ வென்கின்றீர்
மாறு பாயப் படைமன்னர் மாவுந் தேருந் தெள்ளாற்றி
லாறு பாயச் சிவந்ததோ ளிணைகா விரிநா டாள்வானே. (௮௬)

கலிவிருத்தம்.

ஆயர் வாய்க்குழற் காற்றுறு கின்றில
ளேயு மாங்குயிற் கென்னைகொ லாவதே
தேய மார்புகழ்த் தேசபண் டாரிதன்
பாயன் மேல்வரல் பார்த்துநின் றாளுக்கே. (௮௭)

கட்டளைக்கலித்துறை.

துளவுகண் டாய்பெறு கின்றிலஞ் சென்றினிச் சொல்லவல்ல
வளவுகண் டாய்வந்த தாதிகண் டாயடல் வேழமுண்ட
விளவுகண் டாலன்ன மேனிகண் டாய்விறன் மாறன்செய்த
களவுகண் டாய்நந்தி மல்லையங் கானற் கழிக்கம்புளே. (௮௮)

குறிப்பு:—மற்றும் இரண்டுபாட்டுப் புலப்படவில்லை.

பண்டித. அ. கோபாலையர்,
சென்னை.

---

௨

# நற்றுணை நாற்பது.

[செந்தமிழ் ௨௧-ம் தொகுதியின் ௫௦௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

(௨) மறைவர் முதலா வகுத்தவைப் பின்னு
தென்ன வரய்ப்பறை சாற்றி யியல்நூர்
முதல்வர்தம் வகுப்பி லும்பெரும் பழியுட்
கொலையின் றாகிப் புலவுகுறைந் தினிந்தலுங்
கடவு ளமைத்த கல்வடி வக்குக்
கடவுட் டன்மை காட்டல் கரிசாய்

மறுமை மாய்த்தலும் மன்னர்தம் மைந்தரை
யிறையவ ராக விருத்தல் கெட் டாட்சியை
யறவழித் திம்மை யழித்தலும்
பெறுமென் றறிகிலர் பிதற்றறி வினரே.

(௩) மறுபிறப் போடும் வினையில வென்குத
விறைபுரி யாட்சிக் கிமைதிரு வினர்தமக்
கிறுதி பயத்தலி னிம்மைகெட் டிறூஉ
மாகலி னிதுவு மகற்றல்
வாகைபெற் றந்நல வாழ்க்கையர்க் கினிதே.

(௪) உயிர்க்கே பண்புந் திறனு மொன்றுத
லன்றிப் பிறப்புடற் கவையில வென்குந
ருடலைக் கொண்டுயி ருஞற்றும் வினையெலா
முடல் பெறு நலனே யுயிர்பெறு நலனே
யுடல்பெறு துன்பே யுயிர்பெறுந் துன்பே
யாத லறிகில ருயிர்வினைக் கேற்ப
திறனும் பிறப்பி னேர்த லுயிர்க் கொரு
முறையன் றேனெனின் வெளிக்கு முதல்வ
னுள்ளத் தல்ல னாகவும் வெளிக்கலோ
னுள்ளத் தந்தண னாகவு முறுதலி
னென்பீர் போலு மிங்ஙன மிலகுறற்
கேற்றவினைப் பகுதி யியற்றப் படுமே
லின்ன வகையெலா மெய் துமெனு
முன்னதொரு வழியறி வில்லீ ராவிரே.

(தொடரும்.)

K. S, நவநீதகிருஷ்ணபாரதி,
தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.